
டிசம்பர் 2001 – டிசம்பர் 2003

## யுத்த நிறுத்த காலப்பகுதியில் முஸ்லிம்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள்

# சமாதானத்தின் பலி பீடம்



முஸ்லிம் தகவல் நிலையம்-இலங்கை

(மைக்-ஸ்ரீலங்கா)

டிசம்பர் 2003

டிசம்பர் 2001 – டிசம்பர் 2003

## யுத்த நிறுத்த காலத்தில் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள்

# சமாதானத்தின் பலி பீடம்

முஸ்லிம் தகவல் நிலையம் – இலங்கை
(மைக் – ஸ்ரீலங்கா)
டிசம்பர் – 2003

December 2001 - December 2003

# Human Right Violation Committed Against Muslims During The Truce Period

# Samathanathin Palipeedam

Cover Page Photo by : Mohamed Ramsudeen

© MUSLIM INFORMATON CENTRE - SRI LANKA
(MIC-SL)
COLOMBO,
SRI LANKA.
E-mail : miclanka@hotmail.com

Published on : December 2003

Price : 60.00

# உள்ளடக்கம் பக்கம்

முன்னுரை

அத்தியாயம் – 1
சமாதானமும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளும்

1.1. சமாதான முயற்சியில் மனித உரிமை தொடர்பான முஸ்லிம் நலன்கள் 03

1.2. முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் 07

1.3. முஸ்லிம்களின் பாதுகாப்பும் அரசியல் பிரதிநிதிகளும் 11

1.4. முஸ்லிம்களின் பாதுகாப்பும் தமிழ் அரசியல் பிரதிநிதிகளும் 14

1.5. முஸ்லிம்களின் பாதுகாப்பும் விடுதலைப் புலிகளும் 17

1.6. முஸ்லிம்களின் பாதுகாப்பும் அரசும் 19

அத்தியாயம் – 2
முஸ்லிம்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள்

1. உடலியல் ரீதியானவை 21-28
1.1. கொலை
1.2. காணாமல் போதல்
1.3. கடத்தப்படல் / தடுத்து வைக்கப்படல்
1.4. தனி நபர்கள் / குழுக்கள் மீதான தாக்குதல்
1.5. சித்திரவதை

2. பொருளாதார ரீதியானவை 29-36
2.1. வாகன அபகரிப்பு / கடத்தல்
2.2. கால் நடை அபகரிப்பு / கடத்தல்
2.3. உடமைகள் அபகரிப்பு
2.4. உடமைகள் மீதான தாக்குதல் / தீவைப்பு
2.5. வரி, கப்பம் அறவீடு
2.6. ஏனையவைகள்

3. சமூக, சமய ரீதியானவை 37-41
3.1. கிராமங்கள் மீதான தாக்குதல்கள்
3.2. கிராமங்களை விட்டு வெளியேற்றுதல்
3.3. பகிஷ்கரிப்புக்கள்
3.4. அச்சுறுத்தல்கள்

4. கல்வி, நிறுவாக ரீதியானவை 42-44
4.1. கல்வி ரீதியானவை
4.2. நிருவாக ரீதியானவை

[illegible] 2001 - December 2003

# [illegible] Right Violation Committed

# [illegible] Muslims During The [illegible]

# Samathanathin Pathaiyil

Cover Page Photo by : Mohamed Ramsudeen


MUSLIM INFORMATON CENTRE - SRI LANKA
(MIC SL)
[illegible]COMBO,
SRI LANKA.
E-mail : miclanka@hotmail.com

Published on : December 2003

Price : 60.00

2304

## அத்தியாயம் – 1

# சமாதானமும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளும்

# முன்னுரை

இலங்கையின் இனப்பிரச்சினை வரலாற்றில் மிகவும் துரதிஷ்டவசமான அம்சம். இலங் கை முஸ்லிம்களின் பிரச்சினை மனித உரிமை அடிப்படையில் நோக்கப்படா ்மையாகும். இனப்பிரச்சினை வரலாற்றில் தமிழ்-முஸ்லிம் சமூகங்களின் இழப்புக் களும் பிரச்சினைகளும் எண்ணிக்கை அடிப்படையில் வித்தியாசப்பட்ட போதும். தமிழர்களுக்குச் சமாந்தரமாக முஸ்லிம் களும் பல பிரச்சினைகளையும் இழப்புக் களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

ஆனால் முஸ்லிம்கள் தமது பிரச்சினை யை மனித உரிமை நோக்கில் முன்வைக கத் தவறியதன் காரணமாக தமிழர்களின் பிரச்சினைகளுக்கும் இழப்புகளுக்கும் கிடைத்த சர்வதேச சமூகத்தின் அங்கீ காரம், முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கும் இழப்புகளுக்கும் கிடைக்கவில்லை.

சமாதான காலப்பகுதிகளில் கூட பல முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டு, காணாமல் போய், பல முஸ்லிம் கிராமங் கள் தமிழ் ஆயுத பாணிகளின் கூட்டுத் தாக்குதலுக்கு இலக்கானது. எனினும் முஸ்லிம் சமூகத்தின் துயரங்கள், அச்சமூ கத்திற்கு எதிராக இழைக்கப்பட்டு வரும் மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் என்பன சர்வதேச சமூகத்தாலும், மனித உரிமைகள் அமைப்புக்களாலும் இன்னும் கண்டுகொள்ளப்படாமலே இருந்து வருகின்றது.

இப்பின்னணியில் முஸ்லிம் தகவல் நிலை யம் இலங்கையில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதான காலப் பகுதியில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளையும், மனித உரிமை மீறல்களையும் பட்டியலிட்டு தேசிய, சர்வதேச சமூகங்களுக்கு முன்வைக்கின்றது.

2001ம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டு விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்ச யுத்தநிறுத்த காலத்திலிருந்து முஸ்லிம களுக்கு எதிரான தமிழ் ஆயுத பாணிகளின் அடக்குமுறைச் சம்பவங்கள் தலைதூக்கத் தொடங்கியது. பின்னர் அரசும்-விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டதிலிருந்து முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களும் மனித உரிமை மீறல்களும் படிப்படியாக அதிகரி த்து வருகின்றன.

2001 டிசம்பரிலிருந்து 2003 நவம்பர் வரைக்குமான காலப்பகுதியில் 200க்கும் மேற்பட்ட வன்முறைச் சம்பவங்களும் மனித உரிமை மீறல் சம்பவங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இச்சம்பவங்களில் 20 பேர் கொலை செய்யப்பட்டு 14 பேர் காணாமல் போயுள்ளனர். சுமார் 12க்கும் மேற்பட்ட முஸ்லிம் கிராமங்கள் ஆயுதபா ணிகளின் கூட்டுத் தாக்குதலுக்கு இலக்கா கியுள்ளன. மூதூரிலுள்ள பல முஸ்லிம் கிராமங்கள் 10 மாத கால இடைவெளிக் குள் இரு தடவை தாக்கப்பட்டது.

கடற்பரப்பில் முஸ்லிம் மீனவர்கள் சுதந்தி ரமாக மீன்பிடித்தலில் ஈடுபட முடியாதுள்ள னர். அவர்களின் வள்ளங்கள், உபகரணங் கள் தொடர்ந்தும் தமிழ் ஆயுதபாணி களால் பறிமுதல் செய்யப்பட்டும், தடுத்து வைக்கப்பட்டும் வருகின்றன. வியாபாரம், விவசாயம் போன்ற தொழில் துறைகளில் ஈடுபடுபவர்கள் இவ்வாறான பிரச்சினைக ளை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டின் கீழ் உள்ள தமிழ்ப் பிரதேசங்களில் முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மிகவும் அதிகரித்துக் காணப்படுகின்றன. கிண்ணியாவிலுள்ள தமிழ்ப்

பிரதேசங்களுக் குச் சென்று விறகு வெட்டி விற்கும் தொழி லாளர்கள் கூட வரி விதிப்பிற்கும் கப்பம் கோரலுக்கும் உட்பட்டு வருகின்றனர்.

முஸ்லிம்களுக்கு எதிரான இந்நடவடிக் கைகளைக் கண்டித்து கிழக்கு மாகாணத் தில் பரவலாக முஸ்லிம்கள் ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளிலும், பகிஷ்கரிப்புக்களிலும் ஈடுபட்டனர். இருப்பினும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களும் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளும் கட்டுப் படுத்தப்படாது இலங்கை முஸ்லிம்கள் சமாதானத்துக்கான பலிபீடமாக்கப்பட்டுள்ளனர்.

எனவே இது தொடர்பில் முஸ்லிம் தகவல் நிலையம் சமாதான காலப் பகுதியில் முஸ்லிம்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல் சம்பவங்களை பட்டியல் படுத்தி முஸ்லிம்களின் மனித உரிமையை மதிக்குமாறும், உறுதிப்படுத்து மாறும் சம்பந்தப்பட்டவா்களுக்கு முன்வைக்கின்றது.

2304

# சமாதான முயற்சியில், மனித உரிமைகளும் முஸ்லிம் நலன்களும்

சமாதான முயற்சிகளுக்கு மனித உரிமை தொடர்பான அனுகுமுறை மிகவும் அவசிய மானது. இத்தகைய அனுகுமுறை சமாதானச் செயல்முறையின் அனைத்து படிமுறைகளிலும் பின்பற்றப்பட வேண்டிய ஒன்றாகும் இவ் அனுகுமுறை சிவில் சமூகம் மற்றும் சர்வதேச சமூகத்தினால் கண்காணிக்கப்படக் கூடியதும், நடை முறைப்படுத்தக் கூடியதுமான வகையாக போதிய ஏற்பாடுகளை உள்ளடக்கிய மனிதஉரிமை சட்டங்களைக் கொண்டதாக அமையவேண்டும். மனித உரிமைகளே நின்று நிலைக்கக்கூடிய அரசியல் தீர்வின் நிலைப்பினை தீர்மானிப் பதாகவும் வழி நடத்துவதாகவும் அமையும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக் கான நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாக மனித உரிமைகள் உள்ளடக்கப்பட வேண்டும். மேலும் மனித உரிமைகளின் நியமங்களையும் நடைமுறை களையும் முன்னேற் றம் பற்றியும் கிரமமாகக் கலந்துரையாடப் பட வேண்டும். பொதுவாக மனித உரிமை கள் பேச்சுவார்த்தைகளில் கலந்துரையா டடி நடைமுறைப்படுத்தக் நெகிழ்ந்து கொடுக்கக் கூடிய தன்மையைக் கொண் டதாகவே அமையும். இதன் உட்பொருள் என்னவெனில், அனைத்து தரப்பினரும் எல்லா சந்தர்ப்பங்களிலும், மனித உரிமை களின் முதன்மைத்தன்மையினை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதாகும்.

மனித உரிமைகள், மனிதாபிமான நியமங்கள் ஆகியன ஒன்றாகவே கையா எப்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைகள் சட்டகமொன்று அனைத்து மனிதநேயக் கோட்பாடு களையும் சிறப்பான வகையில் உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

இலங்கையில் வாழும் அனைத்து சமூக ங்களினதும் அபிவிருத்திக்கான உரிமை சமூக வேறுபாடின்றி முதன்மையாக கருத் திற் கொள்ளப்பட வேண்டும். சமத்துவம், சமூக நீதி, சம உரிமை என்பன அரச நிர்வாகம் மற்றும் சமூக உற்பத்திகளை அனுபவித்தல் என்பவற்றில் உறுதிப்படுத் தப்பட வேண்டும். இதற்காக பல சமூகங் களின் பிரதிநிதிகளை உள்ளடக்க, அவர் களும் பங்குபற்றுவதற்கு வழி வகுக்கும் வகையில் இலங்கைக்கான சமூகப் பட்டயம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

மனித உரிமை அனுகுமுறையில் பால்நிலை என்ற அம்சமும் (சமாதான முயற்சியில்) கருத்திற் கொள்ளப்பட வேண்டும். பெண்களினதும் குழந்தைகளின தும் உரிமைகள் தொடர்பாக உயர்ந்த கரிசனை காட்டப்பட வேண்டும். வெறுமனே பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகள் மட்டுமல்லாது சமாதான முயற்சியுடன் தொடர்புபட்ட அனைத்து தரப்பி னரும் சமாதான முயற்சியில் பால்' நிலை தொடர்பான பிரச்சினைகளை உள்வாங்குவதற்கான ஒரு பொறிமுறை யை உருவாக்க வேண்டும்.

முஸ்லிம் பெண்கள் அவர்களது சுதந்திர வரையறைக்ளுக்குட்பட்ட வகை யில் சமாதான செயல் முறையில் பங்குபற்றுவதற்கான ஊக்கமளிக் கப்பட வேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது மனித உரிமைகள் தொடர்பான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு அதன் விளைவாக இறுதி அரசியல் தீர்விலும் அதன் பின்னர் உருவாக்கப் படுகின்ற அரசியலமைப்பு ரீதியான யாப்பு ஏற்பாடுகளிலும் மனித உரிமைகள் தொடர்பான தெளிவான அத்தியாயமொ ன்று உருவாக்கப் படுவதற்கு வழி வகுக்கப்பட வேண்டும். இத்தகைய ஏற்பாடு பயனுறுதிவாய்ந்த நடை முறைப்படுத்தலைக் கருத்திற்கொண்டு சருவதேச சமூகத்தி னால் வரையப்பட வேண்டும்.

வேண்டுமென்றோ, செயற்பாட்டு ரீதியாகவோ மனித உரிமை மீறல்களை ஊக்குவிப்பதில்லை என பகிரங்க அறிக் கையொன்றை வெளியிடுமாறு அனைத்து தரப்பினரையும் வலியுறுத்தப்பட வேண்டும். இவ்வறிக்கையானது எதிர்காலத்தில் இடப் பெயர்வுகளை, பலவந்த வெளியேற்றத் தினை ஏற்படுத்தக்கூடிய நிலைமைகளை

நேரடியான அல்லது மறைமுகமான வழி களில் உருவாக்குவதில்லை என்று அனைத்து தரப்பினரின் உறுதிமொழியுடனான அர்ப் பணிப்பை உள்ளடக்கியதாக அமைய வேண்டும். இது சமாதான முயற் சிகள் மீதான பொதுமக்களின் நம்பிக் கையை கட்டியெழுப்பவும், பலப்படுத்தவும் உதவுவதோடு காத்திரமானதும் பயனுறுதி வாயந்ததுமான சமாதான முயற்சிக்கு பங்களிப் பதாகவும் அமையும்.

சிறிய அல்லது பலவீனமான சமூகங்களின் உரிமைகளும் சுதந்திரங்களும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். இவர்களது உரிமை களும் சுதந்திரமும் பாதுகாப்பும் மேம்பாடும் சமாதான முயற் சியின் அனைத்து கட்டங்களிலும், பேச்சு வார்த்தையின் பெறுபேற்றிலும் அழுத்தி யுரைக்கப்பட வேண்டும். இவை வெறுமனே சிறுபான்மை சமூகங்களை உரிமைகளை மட்டும் அடையாளப்படுத்தாது அவர்களை தனித்து வமான தேசமாக் அல்லது தேசிய இனமாக அங்கீகரிக்கக் கூடிய தனியான அரசியல் அந்தஸ்தினை முன்கூட்டியே நிர்ணயிப்பதாக அமைய வேண்டும்.

முஸ்லிம் சமுகம் தனியானதும் தனித்துவமா னதுமான அரசியல் அடையாளத்தையும் ஆளுமையையும் கொண்டுள் ளது. வடக்கிலும் கிழக்கிலும் வாழ்கின்ற முஸ்லிம்கள் வரலாற்று ரீதியாக அடையா ளப்படுத்தக்கூடிய வாழ்விடப் பிரதேசங் களைக் கொண்டுள்ளனர். மேலும் அவர் களுக்கே உரித்தான தனித்துவமான கலா சாரம், சமயம், தனித்துவமான வாழ்க்கை முறை என்பவற்றைக் கொனன்டுள்ளனர். இம் மக்களின் உள்ளக சுயநிர்ணய உரிமை என்பது விட்டுக் கொடுக்கப்பட முடியாதது. இவர்களின் சுயாட்சி மற்றும் சுய ஆளுகைக்கான தொடர்ச்சியான அவாவும் கோரிக்கையும் சுயநிர்ணய உரிமையின் வெளிப்பாடாகும்.

இலங்கை யுத்தநிறுத்த கண்காணிப் புக்குழுவிற்கு முறையிடப்படும் யுத்த நிறுத்த மீறல் சம்பந்தமான முறைப்பாடுகள் விசாரிக்கப்படுவது தொடர்வதாகத் தெரிய வில்லை. கண்கானிப்புக் குழுவினருக்கும் தரப்பினருக்குமிடையே இடம்பெறும் இது தொடர்பான கலந்துரையாடல்களுக்கு அப்பால் சிவில் சமூகக் குழுக்கள் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் மாவட்ட மட்டத்தில் கண்கானிப்புக் கடமைகளில் கண்கானிப்புக் குழுவினுள் உள்வாங் கப்படுவது அவசியமாகும். இதன் மூலம் குறிப் பிட்ட சம்பவம் தொடர்பான உண்மைகளை நிச்ச யப்படுத்தவும், மீறல்கள் மீண்டும் இடம்பெறா மலிருப்பதை உறுதிப் படுத்தவும் முடியும்.

அனைத்து சம்பவங்கள் தொடர் பாகவும் வெளிப்படையான விளக்க மளிப்பது அவசிய மாகும். இது உரிமை மீறலுக்கு உட்பட்டோருக்கு சமாதான முயற்சியில் தாம் அநியாயம் இழைக்கப் பட்டமைக்கு பரிகாரம் கான ஏற்பாடுகள் உள்ளன என்ற நம்பிக்கையை வழங்கும்.

நிலைமாறு கட்ட நீதி என்ற கோட்பாடு (ஊழழெ-உநிவ ழக வுசயளெவைழைெயட துரளவைழஉந) எப்போதும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். தரப்பினரின் பரஸ்பர நம்பிக்கை அதிகரிக்கும் போது, ஆயுதமோதல்கள் இடம்பெற்ற காலப் பகுதியில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை எடுத்துக் கூறுவதற்கும், அதற்கான பரிகாரத்தை பெறுவதற்குமான களமொன்று அமைக்கப் பட வேண்டியது அவசியமாகும். பாரதூர மான உரிமை மீறல்களான காணமல் போதல், நீதிக்கு அப்பாற் பட்ட அல்லது தன்னிச்சையான கொலைகள், பலவந்த வெளியேற்றங்கள் என்பன சருவதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஒளிவு மறைவற்ற செயல்முறையொன்றினூடாக விசாரிக்கப்பட வேண்டும். ஆனால் உண்மைகளை நிறுவுவதற் கான தேடல் மற்றும் நீதித்துறையின் தண்டனை என்பன மலினப்படுத்தப்படக் கூடாது.

இலங்கை மக்கள் பயனுறுதிவாய்ந்த வகையில் மனித உரிமைகளை அனுபவிப் பதில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற வகை யில் நடைமுறையிலுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் ஏனைய கட்டுப் பாட்டு நடைமுறைகள் மற்றும் கொள் கைகள் என்பன மீளாய்வு செய்யப்பட வேண்டும். பாரம்பரியமான பொருளாதார செயற்பாடுகளை தடையின்றித் தொடர் வதற்கும், வளங்களை அடைந்து கொள்வதற்கும், தனியார் சொத்துடை மைக்கான உரிமை மற்றும் தனி நபர்கள் நாட்டின் எநதப் பகுதிக்கும் சென்றுவருவதற்குமான சுதந்திரம் என்பன வழங்கப்பட வேண்டும். இதன் கருத்தாவது, வடகிழக்கிலுள்ள முஸ்லிம்களின் வாழ்விடங்கள் பயிர்ச் செய்கை நிலங்கள் உட்பட கைப்பற்றப்பட்ட சொத்துக்களை மீளஅளிப்பதும் வியாபாரம், மீன்பிடி, பயிர்ச்செய்கை மற்றும் ஏனைய பாரம்பரிய தொழில்களை ஆரம் பிப்பதற் கான தகுந்த சூழ்நிலைகளை உருவாக்குவதாகும்.

மனித உரிமைகளை அமுலாக்கு வதற்கான பொறிமுறையொன்று சருவதேச மேற்பார்வையின்

கீழ் உருவாக்கப்பட வேண்டும். இத்தகைய பொறிமுறைக்கு சமாதானப் பேச்சுவார்த்தை, மனித உரிமை தொடர்பான வளவாளராகத் தொழிற் படுபவர் இணைப்பாளராகவும், ஆலோசக ராகவும் இருக்கலாம். இப்பொறிமுறை பேச்சுவார்த் தையில் பங்கு கொள்ளும் தரப்பினர், முஸ்லிம் சமூகத்தினைச் சேர்ந்தவர்கள் மற்றும் சிவில் சமூகக் குழுக்கள் உட்பட அனைத்து தரப்பினரையும் கொண்டமைந்ததாக உருவாக்கப்பட

* உரிமைகள்: முஸ்லிம் சமூகம் தொடர்பாக பின்வரும் உரிமைகள் வரையப்பட வேண்டும்( இது தெளிவாக வரையறுக்கப்பட்ட பட்டியலல்ல ஆனால் தொட்டுக் காட்டக்கூடிய பட்டியல் மட்டுமே)

01. சுயநிர்ணயத்திற்கான உரிமை (ஆட்சி மற்றும் தீர்மானம் எடுக்கும் செயல்முறையில் பங்குபற்றல்)

02. நிலம் மற்றும் ஏனைய வளங்களை அனுபவிப்பதற்கும், அடைவதற்கும், உரித் துடையதாக்குவதற்குமான உரிமை (தற்போது கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் ஏறத்தாழ பல ஆயிரம் ஏக்கருக்கும் மேலான நிலங்களை அனுபவிக்க முடியாதுள்ளனர்)

03. சொந்த வாழ்விடங்களுக்குத் திரும்பிச் செல்வதற்கான உரிமை (ஏறத்தாழ 100000 முஸ்லிம்கள் வடக்கி லிருந்து 1990 இல் விடுதலைப் புலிகளால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு வடகிழக்கிற்கு வெளியே வாழ்ந்து வருகின்றனர்.)

*. வாழ்வதற்கான உரிமை

*. ஒன்றுகூடுவதற்கான உரிமை

* எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கும் மாற்று அரசியல் கருத்தை கொணடிருப்பதற்கும் அதனை வெளிப்படுத்துவதற்குமான . உரிமை

*. அரசினதும், சட்ட யாப்பினதும் மற்றும் சட்ட ஒழுங்கை உறுதிப்படுத்தும் பாதுகாப்பு பொறி முறைகளினூடாகப் பாதுகாப்பைப் பெறுவதற் குமான உரிமை

*. சமயத்தைப் பின்பற்றுவதற்கும் சமூக, பொருளாதாரமற்றும் கலாசார வாழ்வினை மேம்படுத்துவதற்குமான உரிமை

*. மேலும் சருவதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய அனைத்து உரிமைக ளையும் அனுபவிப்பதற்கான உரிமை.

சருவதேச சட்டத்திற்கு அமைவாக பொது மக்களுக்கு எதிரான வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபடுவதை சம்பந்தப்பட்ட தரப்பினர் கண்டிப்பாக தவிர்ந்து கொள்ள வேண்டும் என யுத்த நிறுத்த ஒப்பந்தம் குறிப்பிடுகின்றது. இவ்விடத்தில் குறிப்பிடப்படும் சருவதேச சட்டம் என்பது இரு வகையானது.

1. சருவதேச மனித உரிமைகள் மற்றும் மனித நேயச் சட்டம்

2. பொதுவான சருவதேசச் சட்டம்

யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல்களை ஆராயும்போது மனித உரிமைகள் சட்டம் பிரயோகிக்கப்பட வேண்டுமென்பது தெளிவான தாகும். எனவே, இலங்கை கண்காணிப்புக் குழு யுத்த நிறுத்த ஒப்பந் தத்திற்கு ஆக்கபூர்வமான விளக்கமளிப்பது இதன் மூலம் அவசியமாகின்றது.

சமாதான முயற்சிகளின்போது மனித உரிமை தொடர்பாக உலகளாவிய ரீதியில் அறிவிப் பதற்கான முறைமையொன்று அறிமுகப்படுத் தப்பட வேண்டும். இது சம்பந் தப்பட்ட தரப்பினர் சருவதேச உரிமைகள் தொடர்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கூட்டங்களையும் நியமங்களையும் மதிப் பதற்கும் கௌரவிப்பதற்கும் வழி வகுக்கும் இதன் மூலம் சம்பந்தப்பட்ட தரப்பினர் தமது செயற்பாடுகளை வெளிப்படையாக அமைத்துக் கொள்வதற்குப் பொறுப்புச் சொல்வதற்கும் பெருமளவில் வழிவகுக்கும்.

எனவே சமாதானம், அபிவிருத்தி மற்றும் மனித உரிமைகள் தொடர்பாக சமூகங்களுக் கிடையிலான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப் படுவதுடன் அவை தொடரப்பட வேண்டும். இக்கலந்துரையாடல்களில் சமூகத் தலைவர்கள், சிவில் சமூகக் குழுக்கள் மற்றும் துறைசார் சிறப்புத் தேர்ச்சி பெற்றோரின் பங்குபற்றுதல் வேண்டப் படுகிறது. ஒரு தொடர்ச்சியான மனித உரிமைகள் சம்பந்தமான கல்வி இத்தகைய கலந்துரையா டலுக்கு பெரும் உந்து சக்தியாக இருக்கும்.

# முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள்



முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளைக் கண்டித்து ஓட்டமாவடியில் 07.01.2003 அன்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டப் பேரணி

இலங்கையின் இனப்பிரச்சினையின் காரணமாக ஏற்பட்ட யுத்தத்தில் நேரடியாக பங்குபற்றாமலே ஆயிரக்கணக்கான அப்பாவி முஸ்லிம் இளைஞர்களும் யுவதிகளும் பொதுமக்களும் யுத்தத்திலும், யுத்தத்திற்கு வெளியிலும் கொல்லப்படுவது இலங்கை முஸ்லிம்களின் வரலாறாகி விட்டது.

யுத்த நிறுத்த சமாதான காலப்பகுதிகளில் கூட முஸ்லிம்கள் கொலை செய்யப்படுவதும், அவர்களின் மனித உரிமைகள் மீறப்படுவதும் தொடர்ந்த வண்ணம் உள்ளன. இவ்வாறு முஸ்லிம்கள் கொலை செய்யப்படுவதும், அவர்களின் மனித உரிமைகள் மீறப்படுவதும் தற்போதைய சமாதான காலப்பகுதியில் மாத்திரம் தோன்றியுள்ள ஒரு புதிய விடயமல்ல.

1987 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய உடன்படிக்கையின் போதும், 1990 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் - பிரேமதாச பேச்சுவார்த்தை காலத்தின் போதும், 1994 ஆம் ஆண்டு சந்திரிக்கா பிரபாகரன் சமாதான முன்னெடுப் புக்களின் போதும் முஸ்லிம்கள் தமிழ் ஆயுதபாணிகளின் சுதந்திரமான நடமாட்டத் தின் காரணமாக பல்வேறு வகையான மனித உரிமை மீறல்களை எதிர்நோக்கி வந்தமை யாவரும் அறிந்த உண்மையாகும்.

எனவே, இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகளின்போது முஸ்லிம்களின் பாதுகாப்பு விடயத்தில் தீவிர கவனம் செலுத்துவதும், மனித உரிமைகளை உத்தரவாதப்படுத்துவத ற்கு நடவடிக்கைகளை எடுப்பதும் இனப்பிரச் சினைத் தீர்வு முயற்சிகளிலிருந்து வேறுபடுத்தி நோக்க முடியாத ஓர் அம்சமாகும். ஆனால், சமாதான நடவடிக்கைகளின் போது முஸ்லிம் களின் பாதுகாப்புத் தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படாததுடன், இனப்பிரச்சினைத் தீர்வு நடவடிக்கைகளிலும்

முஸ்லிம்களுக்கு உரிய பாத்திரம் வழங்கப்படா மலும் உள்ளது.

இதன் காரணமாக இனப்பிரச்சினையில் முஸ்லிம்களின் பரிணாமம் கருத்திற் கொள்ளப் படாது இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகள் சிங்கள, தமிழ் இரு தரப்பு முயற்சியாக மேற்கொள்ளப்படுகிறது. எனவே தீர்வு முயற்சி களிலிருந்து முஸ்லிம்கள் கைவிடப்படும் போது முஸ்லிம்கள் தமது பாதுகாப்புக்கும், இருப்புக் கும் அபயக் குரல் எழுப்ப வேண்டியுள்ளது.

அத்தகையதொரு நிலைமை, தற்போதைய ஐ.தே.மு அரசு-விடுதலைப் புலிகளுக்கிடையி லான சமாதான முயற்சிகளின்போது முஸ்லிம் களுக்கு ஏற்பட்டுள்ளது. ஐ.தே.மு ஆட்சிக்கு வந்து, விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்ச மான யுத்த நிறுத்தத்தை அறிவிப்புச் செய்த காலத்திலிருந்தே முஸ்லிம்களுக்கெதிரான அடக்குமுறைகளும் மனித உரிமை மீறல்களும் அரங்கேற ஆரம்பித் தன. இதனையிட்டு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு ஒரு பகிரங்கக் கடிதம் எழுதியதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், முஸ்லிம்களின் பல்வேறு கட்சிகளைச் சார்ந்த அரசியல் பிரதிநிதிகளும், அமைப்புக் களின் பிரதிநிதிகளும் ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்புத்துறை அமைச்சர் ஆகியோரைச் சந்தித்து, முஸ்லிம்களின் பாதுகாப்புத் தொடர்பில் கூடிய கவனம் செலுத்துமாறு வேண்டுகோள்கள் விடுத்தனர்.

பொதுமக்கள் தரப்பில் கிராம மட்டங்களிலும், தலைநகரிலும் முஸ்லிம்களுக்கெதிரான அடக்கு முறைகளையும், மனித உரிமை மீறல் களையும் கண்டித்து துண்டுப் பிரசுரங்களும், சுவரொட்டி களும் வெளியிடப்பட்டன.

இதன் விளைவாக, விடுதலைப் புலிகள் முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில், கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் முஸ்லிம்கள் மீது அறவிடும் வரி வசூலிப்புக்களை (கப்பத்தை) நிறுத்துவதாக அறிவித்தனர். அத்துடன் பிராந்திய மட்டங்களில் குழுக்களை அமைத்து, தமிழ் முஸ்லிம் பிளவுக ளைச் சீர்செய்து, தமிழ் முஸ்லிம் உறவுகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் வாக்குறுதி யளித்தனர்.

இவ்வுடன்பாட்டின் பின்னர் குறிப்பாக, கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் பிராந்திய தலைமைகளுடன் முஸ்லிம் பிரமுகர்கள் பேச்சு வார்த்தைகள் நடாத்தி, விடுதலை புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த தமக்குச் சொந்தமான குறிப்பிட்ட வயற் காணிகளில் விவசாய நடவடிக் கைகளில் ஈடுபட முடிந்தது. ஆனால், வடமாகாண முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகள் விடுதலைப் புலிகளால் மீள அளிக்கப்படவில்லை அத்துடன் பொதுவாக முஸ்லிம்கள் மீதான வரி வசூலிப்பு நடவடிக் கைகள் கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டது போல் நிறுத்தப்படவுமில்லை.

விடுதலைப் புலிகளால் முஸ்லிம்கள், மட்டுப் படுத்தப்பட்ட அளவில் விவசாயத்தில் ஈடுபட அனுமதியளிக்கப்பட்டபோதும், விவசாய அறுவடைகளுக்காக முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளுக்குக் கப்பம் செலுத்த வேண்டிய நிலை மாற்றமடையாது தொடர்ந்தும் அமுல்படுத் தப்பட்டது. எனவே, விடுதலைப் புலிகளின் இவ்வனுமதி முஸ்லிம் நலன்களை கருத்திற் கொள்வதிலும் பார்க்க விடுதலைப் புலிகளின் நலன்களை மையப்படுத்தியதாகவே காணப் பட்டது. இதனை விடுதலைப் புலிகளின் பின்னைய நடவடிக்கைகள் தெளிவாக உறுதிப் படுத்துகின்றன.

ஓர் ஏக்கர் நிலப்பகுதியில் விவசாயத்தில் ஈடுபடுவதற்கு 500 ரூபாவும், விவசாய நடவடிக் கைகளுக்காக பயன்படுத்தும் ஓர் உழவு இயந்தி ரத்துக்கு 5000 ரூபாவும், ஒரு மூட்டை நெல்லுக்கு 100 ரூபாவும் விடுதலைப் புலிகளால் கப்பமாகக் கோரப்பட்டது.

வாழைச்சேனை, ஓட்டமாவடி பிரதேசங்களில் மீன்பிடியில் ஈடுபட்ட தோணிகளுக்கும், இயந்திரப் படகுகளுக்கும் காலத்துக்குக் காலம் விடுதலைப் புலிகளால் வேறுபட்ட தொகைகள் வரி அறவிடப் பட்டு வந்தன.

கிண்ணியா பிரதேசத்தில் விறகு வெட்டி விற்கும் தொழிலில் ஈடுபடுபவர்கள் கூட ஒவ்வொரு துவிச்சக்கர வண்டிக்கும், மாட்டு வண்டிலுக்கும் வரிப் பணத்தைச் செலுத்துமாறு

நிரப்பந்திக்கப்பட்டனர். மறுத்தபோது, அவர்களின் வாகனங்கள் விடுதலைப் புலிகளால் பறிமுதல் செய்யப்பட்டு, அவற்றை விடுவிப்பதற்கு பெருந்தொகைப் பணம் கோரப்பட்டது. கால் நடைகளுக்குக் கூட வரி விதிக்கப் பட்டது. உரியவர்கள் வரியைச் செலுத்தாத போது கால்நடைகளும் உடமைகளும் விடுதலைப் புலிகளால் பறிமுதல் செய்யப்பட்டது.

தமிழ் விவசாயிகள், வியாபாரிகள், உற்பத்தியா ளர்கள், பல பிரதேசங்களில் முஸ்லிம்களுடன் நேரடியாக வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலிருந்தும் தடுக்கப்பட்டனர். தமிழ் மக்கள் தமது வியாபாரப் பொருட்களை விடுதலைப் புலிகளிடம் கையளிக்குமாறு வேண்டப்பட்டனர். பின்னர், விடுதலைப் புலிகள் அப்பொருட்களை முஸ்லிம்களுக்கு கூடுதல் விலைக்கு விற்பனை செய்வதன் மூலமாக முஸ்லிம்கள் மீது மேலும் மறைமுக வரி விதிப்புக்களை மேற்கொண்டனர்.

இவ்வாறு, விடுதலைப் புலிகளின் முஸ்லிம்கள் மீதான வரி விதிப்பு நடவடிக்கைகளும், வாகனங்களைத் தடுத்துவைத்து கப்பம் கோரும் நிகழ்வுகளும் சமாதான காலப் பகுதிகளில்கூட தொடர்ந்தவண்ணம் உள்ளன. இது முஸ்லிம் களுக்கு மத்தியில் நிம்மதியில் லாத, அமைதியற்ற தொரு சூழலைத் தோற்று வித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல்களுக்கும், அநீதிகளுக்கும் உட்பட்ட முஸ்லிம்கள் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகங் களிலும், பொலிஸ் நிலையங்களிலும் முறைப் பாடுகளைச் செய்தனர். முஸ்லிம் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் குரல் எழுப்பினர். சிலபோது விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்கான முஸ்லிம் இளைஞர்கள் எதிர் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். மூதூரில் விடுதலைப் புலி உறுப்பினரால் தாக்கப்பட்ட முஸ்லிம் இளைஞன் விடுதலைப் புலிகளின் மூதூர் அரசியல் பணிமனையினுள் நுழைந்து அங்கிருந்த கதிரைகளைச் சேதப்படுத்தினான், மேலும், பல இடங்களில் முஸ்லிம் பொதுமக்கள் திரட்சியாகக் கிளர்ந்தெழுந்து, விடுதலைப் புலிகளுக்கு எதிரான தமது கண்டனங்களை வெளிப்படுத்தினர்.

ஆனால், இவ்வாறு முஸ்லிம்கள் தமக்கெதிராக இழைக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்ட போதிலும்கூட, முஸ்லிம்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை. மாறாக, முஸ்லிம்களுக் கெதிரான மனித உரிமை மீறல்கள் பன்மடங்காக அதிகரித்து வருகின்றது. அதன் உச்ச நடவடிக் கையாக 2002 யூன்-யூலை மாதங்களில் வாழைச்சேனை முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களையும், 2003 ஏப்ரலில் மூதூர், தோப்பூர், பிரதேசங்களின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களையும் குறிப்பிடலாம்.

வாழைச்சேனை சம்பவத்தின் போது காணாமல் போன இரு முஸ்லிம் இளைஞர்கள் கொலை செய்யப்பட்டு அவர்களின் சடலங்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசமான தமிழ்ப் பகுதியில் புதைக்கப் பட்டிருந்தமை கண்டுபிடிக் கப்பட்டது. இதனை யறிந்த அவ்விளைஞர் களின் பெற்றோர், பொலிஸாரின் உதவியுடன் அச்சடலங்களை மீளப்பெற்று இஸ்லாமிய முறைப்படி நல்லடக்கம் செய்வதற்காக அப்பகு திக்கு விரைந்தனர். ஆனால் சடலங்கள் பெற் றார்களிடம் கையளிக்கப்படாது பொலிஸார், நீதிபதி, திடீர் மரண விசாரணை அதிகாரி, ஆகியோரின் முன்னிலையில் டயரில். கிடத்தப் பட்டு தமிழ் ஆயுதபாணிகளால் எரிக்கப்பட்டது.

இவ்வாறு, மார்ச் 2003 இல் மூதூர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான சம்பூர்ப் பகுதியில் இரு முஸ்லிம் இளைஞர்கள் கடத்தப பட்டதை அடுத்து மீண்டும் மூதூர்ப் பிரதேசம் பதற்றத்துக்குள்ளானது. மேலும் ஏப்ரல் மாதம் தோப்பூர், மூதூர் பகுதிகளிலுள்ள பல முஸ்லிம் கிராமங்கள் தமிழ் ஆயத பாணிகளால் தாக்கி அழிக்கப்பட்டு பலர் கொலை செய்யப்பட்டனர். அத்தாக்குதல் நடவடிக்கையில் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த அப்பாவி முஸ்லிம் ஒருவர் தமிழ் ஆயுதபாணிகளால் குரூரமாக வாளினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். (அவரின் கழுத்து வேறாக துண்டிக்கப்பட்டது.)

இக்காலத்தில் உதிரிகளாக பல்வேறு இடங் களில் நடந்த சம்பவங்களில் 20க்கும் அதிகமான முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டு இன்னும் பலர் காணாமற் போயினர். இதில் வாழைச்சேனையைச்

சேர்ந்த முச்சக்கர வண்டிச்சாரதி தமிழ்ப் பகுதியில் வைத்து கழுத்து நெரிக்கப்பட்டு மிகக் குரூரமாக கொலை செய்யப்பட்டார்.

இவ்வாறு தொடர்ந்தும் முஸ்லிம்கள் யுத்த நிறுத்த சமாதான காலப்பகுதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களான தமிழ்ப் பகுதியில் மிக குரூரமான முறையில் உடலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். சமகாலத்தில் விடுதலைப் புலிகளின் வரி அறவீடு, வாகனக் கடத்தல் என்பனவும் தொடர்ந்தும் இடம்பெற்று வந்தன.

2003 ஏப்ரல் மூதூர்ச் சம்பவங்களிற்குப் பின்னர் முஸ்லிம்களுக்கெதிரான மனித உரிமை மீறல்கள் ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப் பட்டன. எனினும் ஆகஸ்ட் 2003 இல் திருகோ ணமலை குச்சவெளிப் பிரதேசத்தில் மூதூரைச் சேர்ந்த இரு முஸ்லிம் இளைஞர்கள் தமிழ் ஆயுதபாணிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சம்மாந்துறை சேனவத்தைப் பகுதியிலும் இரு முஸ்லிம் இளைஞர்கள் மனித நடமாட்ட மில்லாத நேரத்தில் ஆயதபாணிகளால் வயல் பகுதியில் வைத்து சுட்டுக் கொல்லப் பட்டனர். அதன்பின் சாய்ந்தமருதைச் சேர்ந்த இரு இளைஞர்கள் சித்தாண்டியில் வைத்து காணா மற் போயினர். மட்டக்களப்பு - பொலனறுவை எல்லைக் கிராமமான புத்தூர்ப் பகுதியிலும் இரு முஸ்லிம்கள் காணாமற் போனதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. இந்நிகழ்வுகள் முஸ்லிம் களை தொடர்ந்தும் பதற்றத்திற்கும் பீதிக்கும் உட்படுத்தி வருகின்றன.

இதன் விளைவாக முஸ்லிம்களுக்கெதிரான அடக்குமுறைகளில் ஈடுபடுவோரை கண்டி த்தும் முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறும், உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் கோரி முஸ்லிம்கள் கடையடைப்பு ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இக்காலப் பகுதியில் மூதூரில் ஒரு தமிழ் இளைஞர் காணாமற் போனதாகவும் சாய்ந்த மருதுவில் தாதியாக கடமை புரியும் மற்றுமொரு தமிழ் இளைஞர் முஸ்லிம் இளைஞர்களால் தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதான காலப் பகுதியில் வடகிழக்கில் தொடர்ந்தும் முஸ்லிம்களின் மனித உரிமைகள் மீறப்படுவது, அவர்களது பாதுகாப்பிற்கு உத்தர வாதமற்ற நிலை இவை காரணமாக அவர்கள் இன்னும் அரசியல், கல்வி, சமூக, பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டு வருகி ன்றனர். இவ்வாறு பல்வேறு வகையில் பாதிப்பிற் குள்ளாகும் முஸ்லிம் இளைஞர்களால் அவ்வப் போது தமிழ்ப் பொதுமக்கள் பாதிக்கப்பட்ட ஓரிரு சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

அரசு முஸ்லிம்களது பாதுகாப்புத் தொடர்பில் உரிய கவனம் செலுத்தி அவர்களின் பாதுகா ப்பை உறுதிப்படுத்தாத பட்சத்தில் முஸ்லிம் இளைஞர்கள் சுய பாதுகாப்பில் அல்லது மாற்று வழிமுறை களைப் பின்பற்ற வேண்டிய நிர்ப்பந் தத்திற்கு உட்படுவர்.

# முஸ்லிம்களின் பாதுகாப்பும், அரசியல் பிரதிநிதிகளும்



17.08.2003 அன்று சம்மாந்துறையில் இரு முஸ்லிம்கள் கொல்லப்பட்டதை அடுத்து பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடன் அமைச்சர் ஹகீம்

இலங்கை முஸ்லிம்களின் பாதுகாப்பு ஒரு தேசிய பிரச்சினையாகும். தெற்கு முஸ்லிம்கள் கணிசமானளவு இப்பிரச்சினையை எதிர் நோக்கும் அதேவேளை, வடகிழக்கு முஸ்லிம் களின் பாதுகாப்புப் பிரச்சினை அன்றாடப் பிரச்சினையாக மாறியுள்ளது. வடகிழக்கில் பெருமளவு தமிழ் ஆயுதக் குழுக்களின் அச்சுறுத்தலை எதிர்நோக் கிவரும் முஸ்லிம்கள், அரச படையினரால் உரிய பாதுகாப்பு வழங்கப்படாததன் காரணமாக அப்படையினர் மீது முற்றாக நம்பிக்கை இழந்துள்ளனர்.

இதன் காரணமாக, முஸ்லிம் தரப்பிலிருந்து முஸ்லிம் ஊர்காவல் படை என்ற தனியான முஸ்லிம் படைப்பிரிவுக் கோரிக்கை அவ்வப்போது அதிகாரத்திலிருந்த அரசியல் வாதிகளாலும், பொது அமைப்புக்களாலும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அரசு, ஊர்காவல் படைக் கோரிக் கையை ஏற்றுக் கொண்ட போதும், அது முஸ்லிம் களின் பாது காப்புக்கு ஒரு நிரந்தரத் தீர்வாக அமைய வில்லை. முஸ்லிம்கள் தாக்கப்பட்ட பின்னர் நடைமுறைப்படுத்தப்படும் ஒரு பின்னேற் பாடாக அது அமைகிறதே தவிர, முஸ்லிம்கள் மீது தாக்குதல் இடம்பெறுவதைத் தடுக்கும் ஒரு முன்னேற்பாடாக அமைய வில்லை.

எனவே, முஸ்லிம்களின் பாதுகாப்புத் தொடர்பில் நிரந்தரமான ஒரு ஏற்பாடு இல்லாததன் காரணமாக, தொடர்ந்தும் முஸ்லிம்கள் சமாதான காலப்பகுதிகளில் கூட, பாதுகாப்புப் பிரச்சினை களுக்கு முகங்கொடுத்தவண்ணமே உள்ளனர். இது தொடர்பில் முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகள் அவ்வப்போது தற்காலிக ஏற்பாடுகளைச் செய்கின்றனரே தவிர, முஸ்லிம் களின் பாதுகாப்புத் தொடர்பில் நிரந்தரமான ஏற்பாடுகளைச் செய்யத் தவறி வருகின்றனர்.

அண்மைக் கால சம்பவங்களின் போதுகூட முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகள் பழைய பல்லவி யையே மீட்டியுள்ளனர். முஸ்லிம் ஊர்காவல் படை அமைத்தல், பொலிஸ் பிரிவில் மேலதிக முஸ்லிம் களைச் சேர்த்துக் கொள்ளுதல் என்பனவே அவையாகும். இக்கோரிக்கைகள் 1985 ஆம் ஆண்டிலிருந்து முஸ்லிம் தரப்பிலிருந்து முன்வைக் கப்பட்டு வருகின்றன.

1985களின் அரசியல், பாதுகாப்புச் சூழல்கள் 2000 ஆண்டுகளின் சூழலிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. கடந்த காலங்களில் பாதுகாப்பு, சட்டத்தை நிலைநிறுத்துதல் என்பன அரசின் கைகளில் மாத்திரமே தங்கியிருந்தது. எனவே, முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசின் பொறுப்பாக மாத்திரம் இருந்தது. ஆனால், அண்மைக்கால அரசியல், இராணுவ மாற்றங்கள் மற்றும் அரசு-புலிகள் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை, சர்வதேச சமூகத்தின் தலையீடு, சமாதானச் செயற்பாடுகள் என்பன தற்போதைய சூழலை மாற்றியுள்ளது. வடகிழக்கிலுள்ள பிரதேசங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம், அரச படைகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என இருவேறுபட்ட நிர்வாகத்தின் கீழ் காணப் படுகின்றன.

எனவே, தற்போதைய சூழலில் முஸ்லிம்களின் பாதுகாப்பு, அரசு-விடுதலைப்புலிகள் என இரு தரப்பினர் மீதும் தங்கியுள்ளது. இருப்பினும் முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசின் கடமையாகும். எனினும், சமாதான நடைமுறைகளின் காரணமாக தமிழ்-முஸ்லிம் வன்முறை நிகழ்வுகளின் போது தமிழ்ப் பகுதிகளிலும் தமிழ் ஆயுதபாணிகளின் மீதும் சட்டத்தை நிலைநாட்டும் நடவடிக்கைகளை அரச படையினர் சுதந்திரமாக முன்னெடுக்க முடியாத நிலையிலுள்ளனர்.

இதனால் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபடும் தமிழ் மக்களையே அரச படையினர் கட்டுப்படுத்த முடியாத நிலையில் உள்ளனர்.

சட்டத்தையும், ஒழுங்கையும் மீறி முஸ்லிம் பகுதிகளில் பிரவேசிக்கும் தமிழ் ஆயத பாணிகளைக் கூட அரச படையினர் கட்டுப் படுத்த முடியாத நிலையில் உள்ளனர். இதன் காரணமாக தமிழ் பிரதேசங்களிலும் எல்லைப் பகுதிகளிலும் முஸ்லிம்களின் பாதுகாப்பை அரசினால் உறுதிப்படுத்த முடியாத நிலைமை காணப்படுகின்றது.

ஆனால் முஸ்லிம் பிரதேசங்கள் அரசின் பூரண கட்டுப்பாட்டுப் பிரதேசமாகக் காணப் படுவதன் காரணமாக அரசு முஸ்லிம் பிரதேசங்களில் தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியுமாகவுள்ளது. ஆனால் அதே பாதுகாப்பை தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள முஸ்லிம்களு க்கு அரசால் உத்தரவாதப்படுத்த முடியாமல் உள்ளது. ஆனால், முஸ்லிம்கள் வியாபாரம், விவசாயம், கல்வி, சுகாதாரம், நிர்வாகம், போக்குவரத்து என அன்றாடம் பல்வேறுபட்ட தேவைகளுக்காக தமிழ்ப் பிரதேசங்களுடன் தொடர்பு பட்டு காணப்படுகின்றனர். எனவே, இப்பின்னணியில் தமிழ்ப் பிரதேசங்களில் முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முஸ்லிம் ஊர்காவற்படை, பொலிஸ் பிரிவில் மேலதிக முஸ்லிம்களைச் சேர்த்துக் கொள்வது என்பன எவ்வளவு தூரம் பயன்மிக்கன என்பதையிட்டுச் சிந்திக்கவேண்டியுள்ளது.

எனவே, தற்போதைய அரசியல், சமாதான நிலவரங்களுக்கேற்ப தமிழ்ப்பிரதேசங்களில் முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான பொறிமுறை என்ன என்பதைச் சிந்திப்பதே அவசியமாகும். இந்தவகையில், முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகள் முஸ்லிம்களின் பாதுகாப்புத் தொடர்பில் விடுதலைப் புலிகள் மீது அரசு அழுத்தங்களைப் பிரயோகிப் பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

எனவே, புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் முஸ்லிம்களின் பாதுகாப்புத் தொடர்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாடுகளைத் தெளிவுபடுத்தும் வகையிலான சரத்துக்கள் இடப்பட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் மாற்றியமைக்கப்படுவது அவசியமாகும். இதற்காகவேண்டி, முஸ்லிம் பிரதிநிதிகள் உழைப்பது அவர்களின் கடமையாகும்.

மாறாக, முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகள், ஏட்டிக்குப் போட்டியான பத்திரிகையாளர்கள் மாநாடு நடாத்துவதும், பத்திரிகை அறிக்கை களை விடுப்பதும், உணர்ச்சிபூர்வமாக வசனங் களைப் பேசுவதும் ஒருபோதும் முஸ்லிம்களின் பாதுகாப்பை மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதாக அமையாது.

அத்தகைய செயற்பாடுகள் முஸ்லிம்-தமிழ் சமூக உறவை இன்னும் விரிசலடையச் செய் யவே வழிவகுக்கும். எனவே, முஸ்லிம் அரசி யல் பிரதிநிதிகள் அரச படைகளில் முஸ்லிம் களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக் கை எடுக்கும் அதேவேளை, தமிழ்ப் பிரதேசங் களில் முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்கான பொறிமுறைகளிலேயே அதிகம் கவனம் செலுத்த வேண்டும்.

# முஸ்லிம்களின் பாதுகாப்பும் தமிழ் அரசியல் பிரதிநிதிகளும்

முஸ்லிம்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள், நடவடிக்கைகள் தொடர்பில் தமிழ் அரசியல் பிரதிநிதிகள் முரண்பட்டதொரு போக்கையே கடைப்பிடித்து வருகின்றனர். முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு தமிழ் ஆயுதக் குழுக்களிட மிருந்தே நேரடியான அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு வருகின்றன. 1985ஆம் ஆண்டிலிருந்து முஸ்லி ம்கள் பல்வேறுபட்ட ஆயுதக் குழுக்களிடமிருந்து இப்பிரச்சினைக்கு முகங்கொடுத்து வருகின்றனர். அக்காலத் திலிருந்து அரச படைகளில் நம்பிக்கை இழந்த முஸ்லிம்கள், ஊர்காவல் படைப்பிரிவை அமைக்குமாறு அரசிடம் கோரிக்கை விடுத்தனர். அரசும் அதனை அங்கீகரித்தது. ஆனால், தமிழ் அரசியல் பிரதிநிதிகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததுடன், தொடர்ந்தும் அதனை விமர்சித்து வருகின்றனர்.

அண்மைக் காலங்களில், முஸ்லிம்கள், தமிழ் ஆயுதபாணிகளால் பல்வேறு அச்சுறுத்தல்களை எதிர்நோக்கிவருவதும், பல கிராமங்கள் அழிக்கப் படுவதும், இன்னும் பலர் கொலைசெய்யப் படுவதும் யாவரும் அறிந்த உண்மையாகும். எனவே, முஸ்லிம்களின் பாதுகாப்பைப் பலப்படுத் தும் வகையில் பொலிஸ் பிரிவில் மேலதிக முஸ்லிம்களைச் சேர்த்துக்கொள்ளுமாறு முஸ்லிம் கள் அரசிடம் வேண்டுகோள் விடுத்தனர். அதனை யும் தமிழ் அரசியல் பிரதிநிதிகள் மிகக் கடுமை யாக எதிர்த்துவருகின்றனர். இவ்வாறு முஸ்லிம்கள் தமது பாதுகாப்பைப் பலப்படுத்தும் நடவடிக்கை களுக்கு எதிர்ப்புத்தெரிவிக்கும் தமிழ் அரசியற் பிரதிநிதிகள் தமது நிலைப்பாட்டுக்குப் பின்வரும் காரணங்களை முன்வைக்கின்றனர் -

1. முஸ்லிம் ஊர்காவல் படையினர் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படுகின்றனர்.

2. இக்கோரிக்கைகள் அரசியல் இலாபம் அடைவதை நோக்காகக் கொண்டவை.

3. முஸ்லிம்கள் சமாதானத்தை விரும்பாதவர் களின் கருவிகளாகப் பயன்படுத்தப் படுகின் றனர்.

தமிழ்ப் பிரதிநிதிகள் தமது, முதலாவது நியாயத்தில் முஸ்லிம் ஊர்காவல்படை அல்லது பொலிஸ் பிரிவில் மேலதிக முஸ்லிம் களைச் சேர்ப்பதை முழுக்க தமிழ் மக்களுக்கு எதிரான தொரு செயற்பாடாகவே நோக்குகின்றனர். எனவே, முஸ்லிம்கள் தமிழ் ஆயுதக் குழுக்களின் அச்சுறுத் தல்களிலிருந்து தம்மைப் பாதுகாக்கும் செயற்பாட்டை தமிழ் மக்களுக்கு அல்லது தமிழ் மக்களுக்கு எதிரானதொரு செயற்பாடாக நோக்குவது அடிப்படையி லேயே தவறானதொரு கணிப்பீடாகும். சட்டரீதியான முறையில் முஸ்லிம்கள் தம்மை இராணுவ ரீதியாகப் பலப்படுத் துவதை ஒரு தற்காப்பு நடவடிக்கையாக (னுநககநளெளைந) நோக்க வேண்டுமே தவிர தாக்குதல் மேற்கொள்ளும் (முகககநளெளைந) ஒரு செயற்பாடாக நோக்குவது தவறாகும்.

உண்மையில் முஸ்லிம்கள், இல்லாத ஒரு காரணத்தை சோடனை செய்து ஆயுதத்தின் மீதுள்ள ஆசையின் காரணமாக தமக்கு இராணுவ பாதுகாப்பு வழங்குமாறு அரசை ஒரு போதும் கோரவில்லை. தமிழ் ஆயுதக் குழுக்களின் அச்சுறுத்தல் காரணமாகவே முஸ்லிம்கள் தமக்கு பாதுகாப்பு வழங்கு மாறு கோருகின்றனர். எனவே முஸ்லிம் களுக்கு பாதுகாப்பு வழங்கும் நடவடிக் கையை தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கை என தமிழ் பிரதிநிதிகள் வாதாடுவதானால் முஸ்லிம் களின் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் தமிழ் பிரதிநிதிகள் மாற்று ஆலோசனைகளை அல்லது வழிமுறைகளை முன்வைக்க வேண்டும். முஸ்லிம்கள் அதிகளவில் பாதுகாப்பு அச்சுறுத்தல் களை எதிர்நோ க்குவது தமிழ்ப் பிரதேசங்களி லேயேயாகும். எனவே, முஸ்லிம்கள் தமது பாதுகாப்பு குறித்து எடுக்கும் நடவடிக்கைகள் தமிழ் மக்களுக்கு அச்சுறுத்தலாக அமையும் என வாதிடும் தமிழ்ப் பிரதிநிதிகள் தமிழ்ப் பிரதேசங்களில் முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியதன் பின்னர் அல்லது தமிழ்ப் பகுதிகளில் முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான வழி முறைகளை யாவது முன்மொழிந்ததன் பின்னர் முஸ்லிம்களின்

பாதுகாப்பு தொடர்பாக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து விமர்சிப்பது நியாயமாகும்.

மாறாக எதிர் காலத்தில் தமிழர்களின் பாதுகாப்பு, அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகும் என்ற எடுகோளில், தற்போது தமிழ் ஆயதபாணிகளால் உயிர்க்கொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் முஸ்லிம்களைப் பாதுகாப்பதற்கு மேற் கொள்ளப் படும் நடவடிக்கைகளை கண்மூடித் தனமாக விமர்சிப்பது தமிழ் அரசியற் பிரதிநிதிகளின் பக்கச்சார்பான நடவடிக் கையை பிரதிபலிக்கிறது.

முஸ்லிம்களின் பாதுகாப்பு தொடர்பில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை எதிர்க் கும் தமிழ் பிரதிநிதிகளின் அடுத்த வாதமானது. இந்நடவடிக்கைகள் அரசியல் நோக்கம் கொண்ட தாக இருப்பது என்பதாகும். இலங்கையில் நிதி, நிர்வாகம், பாதுகாப்புத்துறை என்பன அரசியல் மயப்பட்டு ஒவ்வொரு அரசியல்வாதியும் தமது பணிகளை அரசியல் நோக்கத்துடன் முன்னெடுக் கும் போது முஸ்லிம் அரசியல் வாதிகள் மட்டும் இதிலிருந்து விதிவிலக்காக அமைந்து விட முடியாது.

எனவே முஸ்லிம் அரசியல்வாதிகள் முஸ்லிம் களின் பாதுகாப்பு நலன்குறித்து கோரிக்கைகளை தமது அரசியல் இலாப மீட்டலுக்காக பயன்படுத்து கிறார்கள் என்ற ஒரே ஒரு காரணத்துக்காக முஸ்லிம் மக்களின் கோரிக்கையிலுள்ள நியாயத் தை தமிழ் அரசியல் பிரதிநிதிகள் நிராகரிக்க முற்படுவது, தமிழ்ப் பிரதிநிதிகளின் முஸ்லிம் மக்கள் மீதான மேலாதிக்க மனப்பான் மையையே வெளிப்படுத்துகிறது. இவ்விமர் சனம், குறிப்பாக முஸ்லிம் காங்கிரஸ் மீதே முன்வைக்கப்படுகிறது.

மேலதிக முஸ்லிம் பொலிஸாரை நியமிக்கும் கோரிக்கையை முன்வைத்து அதனை வென் றெடுப்பதன் மூலம் தமிழ் முஸ்லிம் பிளவை விசாலப்படுத்தி முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பெற முயல்கிறது என குற்றஞ் சுமத்தப்படுகிறது. மேலதிக முஸ்லிம் பொலிஸாரை நியமிப்பது அல்லது ஊர்காவற் படையை நியமிக்கும் கோரிக்கை தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று தேசிய கட்சிகளில் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர் களாலேயே முதன் முதலில் முன்வைக்கப்பட்டது. யு.டு.ஆ.மன்சூர், டீ. அப்துல் மஜீத், றிஸ்வி சின்ன லெப்பை, யு.ஊ.ளு. ஹமீத் போன்றோர் முதலில் இக்கோரிக்கைகளை முன்வைத்தனர்.

மேலும் முஸ்லிம் காங்கிரஸ் 1988களில் பாராளுமன்ற அரசியலுக்கு பிரவேசித்த ஆனால் 1985களிலிருந்தே முஸ்லிம்கள் தமிழ் ஆயத குழுக்களின் அச்சுறுத்தல்களை எதிர் நோக்கி வருகின்றனர். எனவே அப்போதிருந்தே தேசிய கட்சிகளிலிருந்த முஸ்லிம் அரசியல் பிரதிநிதி களால் இக்கோரிக்கை முன்வைக்கப் பட்டு வருகிறது.

யதார்த்தம் இவ்வாறு இருக்க முஸ்லிம்கள் தமிழ் ஆயத பாணிகளின் அச்சுறுத்தல்களி லிருந்து தம்மைப் பாதுகாக்க மேற் கொள்ளும் நடவடிக்கைகளை அரசியல் ரீதியான நோக்கம் கொண்டது என தமிழ் அரசியல் பிரதிநிதிகள் முழுப் பூசணிக் காயையும் சோற்றினுள் மறைக்க முற்படுவது யதார்த்தத்திற்கும், நீதி நியாயங் களுக்கும் முரணானதொரு போக்காகும்.

தமிழ் அரசியல் பிரதிநிதிகளால் முன்வைக்கப் படும் அடுத்த வாதம் முஸ்லிம்கள் சமாதான த்தை விரும்பாதவர்களின் கருவிகளாக, கைபொம்மை களாகப் பயன்படுத்தப் படுகின்ற னர் என்பதாகும். இவ்வாறு முஸ்லிம்கள் மீது குற்றஞ் சுமத்தி இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகளில் அல்லது நடவடிக்கைகளில் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட வேண்டிய பாத்திரத்தை நிராகரிக்கும் உள்நோக்கம் கொண்ட ஒரு முயற்சியாகும். தமிழர்களைப் போன்று இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களும் இனப்பிரச்சினை தீர்வு முயற்சிகளிலும் நடவடிக்கைகளிலும் பங்கு கொள்வது அவசியமாகும். அவ்வாறு சமா தான நடவடிக்கைகளில் பங்கு கொண்டு தமக்குரிய நியாயமான தீர்வுகளைப் பெற வேண்டியதொரு சமூகத்தை, சமாதான நடவடிக்கைகளுக்கு எதிரானவர்களின் கருவி களாக செயற்படுவதாக குற்றஞ்சுமத்துவது சமாதான நடவடிக்கை களிலிருந்து முஸ்லிம் களைத் தூரப்படுத்தும் நோக்கம் கொண்ட தாகவே கருதப்பட முடியும். இது அரசியல் தீர்வு நடவடிக்கைகளிலிருந்து முஸ்லிம் களை தூரமாக்கி வைக்கும் தமிழ் அரசியல் பிரதிநிதிகளின் ஒரு தந்திரோபாயமா? எனச் சந்தேகிக்க வேண்டியுள்ளது. மேலும் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் வெற்றி யளிக்காத சந்தர்ப்பத்தில் அதற்கான கார ணங்களை முஸ்லிம்களின் மீது சுமத்தி விடுவதற்கும் வாய்ப்பாக அமைந்துவிடும்.

எனவே தமிழ் அரசியல் பிரதிநிதிகள் தமிழ் முஸ்லிம் உறவின் அக்கறையின் காரணமாகவே இக்குற்றச்சாட்டுக்களை முஸ்லிம்கள் மீது முன்வைப்பார்களானால், முஸ்லிம்கள் சமாதான விரோதிகளின் கருவிகளாகப் பயன்படுத்தப் படுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து சமாதான நடவடிக்கைகளில் முஸ்லிம்களுக்குரிய பாத்திரத்தை உறுதிப் படுத்த வேண்டும். அந்த வகையில் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அந்நடவடிக்கைகளில் முஸ்லிம்களுக்கு உரிய பாத்திரம் வழங்கப்பட வேண்டும் என்பதை அரசுக்கு ஒரு நிபந்தனையாக முன்வைக்க வேண்டும். இவ்வாறு தமிழ் அரசியல் பிரதிநிதிகள், முஸ்லிம்களின் பாதுகாப்புத் தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகளை விமர்சனரீதியாக அணுகாது யதார்த்த பூர்வமாக, காத்திரமாக அணுகுவதன் மூலம் தமிழ் முஸ்லிம் உறவை வலுப்படுத் துவதற்கான நடவடிக் கைகளை மேற்கொள்ள முடியுமாக விருக்கும்.




27.08.20030
Island

# விடுதலைப் புலிகளும் முஸ்லிம்களின் பாதுகாப்பும்.



ஆரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பிரதேசங்களை அரசு, விடுதலைப் புலிகளின் கட்டுபாட்டுப் பிரதேசம் என உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொண்டுள்ளது. இதன் மூலம் அரசின் அதிகாரம் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் மாத்திரம் சுருக்கப் பட்டுள்ளது. (வடக்கில் அரசின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களாக பெரும்பாலும் முஸ்லிம் பிரதேசங்களே காணப்படுகின்றன.)

எனவே அரச கட்டுப்பாட்டுப் பிரதேசமல்லாத விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு விடுதலைப் புலிகளே பொறுப்புச் சொல்லும் கடப்பாடுடையவர்களாகக் காணப் படுகின்றனர். மேலும் இப்பிரதேசங் களிலிருந்து தமிழ் ஆயதபாணிகள் முஸ்லிம் கிராமங்கள் மீது தாக்குதல் மேற்கொள்வது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டை மீறிய ஒரு செயலாக அமைய முடியாது.


சென்ற ஏப்ரல் மாதத்தில் தோப்பூர், மூதூர் கிராமங்கள் மீதும், அங்குள்ள முஸ்லிம்கள் மீதும் ஆயதபாணிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் நடவடிக்கைகள் அரச படையினரால் கட்டுப் படுத்த முடியாத நிலையில் மூதூர் மஜ்லிசுஸ் சூரா விடுதலைப் புலிகளுடன் செய்த உடன்பாட்டினை அடுத்து நிலைமை கட்டுப்படுத்தப்பட்டமை இங்கு கவனிக்கதக்கது.

தமிழ்ப் பகுதிகளில் கைத்தொழில், வர்த்தக, கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் முஸ்லிம்களிடம் விடுதலைப் புலிகளே வரி விதிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின் றனர். மேலும் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங் களில் நீதிமன்றம், வங்கி, காவல்துறை அரசியல் அலுவலகம் போன்ற நிறுவனங்களை அமைப் பதன் மூலம் அப்பகுதிகளிலுள்ள முழு நடவடிக் கைகளையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளனர். எனவே விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் முஸ்லிம் நபர்கள் காணமற் போவதும் சுட்டுக்கொலை செய்யப் படுவதும் வாகனங்கள் கடத்தப்படுவதும்

உடமைகள் பறிமுதல் செய்யப்படுவதும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டை மீறியதொரு செயலாக கருதப்பட முடியாது.

ஏனினும் இவ்விடயங்களில் தமக்கு எதுவும் தெரியாது எனவும், தமது உறுப்பினர்களுக்கு இச்சம்பங்களிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை எனவும் இலகுவாக விடுதலைப் புலிகள் மறுத்துவிடுகின்றனர். அதே நேரம் முஸ்லிம் நபர்களுடன் சம்பந்தப்பட்ட தமிழ் மக்களின் வர்த்தக அல்லது தனிப்பட்ட விடயங்களுக்காக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலில்லாத அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாழும் முஸ்லிம்களை விடுதலைப் புலிகளின் அலுவலகங்களுக்கு விசாரணைக்கு வருமாறு அழைப்பாணைகளை அனுப்புகின்றனர். மேலும் முஸ்லிம் கல்வியிய லாளர்கள், விவசாயிகள், வர்த்தகர்கள், மீனவர்கள் போன்றோரையும் விடுதலைப் புலிகளின் பல்வேறு நடவடிக் கைகள் தொடர்பில் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு கூட்டங்களிற்கும் விசாரணை களிற்கும் அழைத்துப் பேசுகின்றனர்.

அதே நேரம் முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் பாதுகாப்புப் பிரச்சினைகள் அச்சுறுத்தல்கள் தொடர்பில் பலதடவைகள் விடுதலைப் புலிகளிடம் முறைப்பாடு செய்த போதும் எத்தகைய நடவடிக்கைகளையும் எடுக்க முன்வராத நிலையே காணப்படுகிறது.




22.04.2003 - Island

# முஸ்லிம்களின் பாதுகாப்பும் அரசும்



முஸ்லிம்களும் இந்நாட்டுப் பிரசைகள் என்ற வகையில் முஸ்லிம்களுக்குரிய பாதுகாப்பை வழங்குவது அரசின் கடமையாகும். ஆனால் அண்மைக்கால சமாதான நடவடிக்கைகளின் போது முஸ்லிம்களின் பாதுகாப்பு நிலை தொடர்ந்தும் மோசமடைந்து கொண்டே வருகிறது. முஸ்லிம் கிராமங்கள் தாக்கப்பட்டு, பலர் கொலை செய்யப்பட்டதன் விளைவாக முஸ்லிம்கள் எதிர்விளைவுகளில் ஈடுபடா வண்ணம் முஸ்லிம்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை களில் போதிய கவனஞ் செலுத்தத் தவறியுள்ளது.

மூதூரில் இரு முஸ்லிம் இளைஞர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்டமை, சம்மாந் துறையில் இரு முஸ்லிம் இளைஞர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்டமை, சாய்ந்தமரு துவைச் சேர்ந்த இரு முஸ்லிம் கள் சித்தாண்டியில் காணமற் போனமை, மட்டக்களப்பு - பொலனறுவ எல்லைக் கிராமத்தில் இரு முஸ்லிம் இளைஞர் கள் காணாமற் போனமை தொடர்பில் முஸ்லிம்களின் வாகனங்கள், மீன்பிடிப் படகு கள், தெப்பங்கள் கடத்தப் படுபவை போன்ற நிகழ்வுகள் முஸ்லிம்களின் பாதுகாப்பற்ற நிலையை தெளிவு படுத்துகின்றன.

ஏனவே முஸ்லிம்களின் பாதுகாப்புத் தொடர்பில் இது வரைக்கும் அரசு உரிய நடவடிக்கை எடுப்பதிலிருந்து தவறியே வருகிறது. களநில வரங்களின் படி முஸ்லிம்களுக் கெதிரான தாக்குதல் நடவடிக்கைகளின் பின்னால் விடுதலைப் புலிகள் இருப்பது தெளிவானது. மேலும் முஸ்லிம்கள் அதிகள வில் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்கொள் வது தமிழ்பிரதே சங்களிலாகும். ஆனால் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி விடுதலைப் புலிகளுக்கெதிராக அரசு எவ்வித நடவடிக் கையும் எடுக்க முடியாத நிலையில் உள்ளது. இரு சமூகங் களுக்கிடையில் பதற்ற நிலை ஏற்படும் போது அரசு ஊரடங்குச் சட்டத்தை அமுல் படுத்தும் போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதே சங்களில் நடமாடும் ஆயதபாணிகளை அவ்வூரடங்குச் சட்டம் கட்டுப்படுத் துவதில்லை.

சேன்ற வருடம் ஜுன் மாதம் அரசின் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் போதே வாழைச்சேனை தமிழ் ஆயத பாணிகளால் தீக்கிரையாக்கப்பட்டது. இவ்வருடம் ஏப்ரல் மாதம் மூதூர்ப் பகுதியில் பல கிராமங்கள் ஊரடங்குச் சட்ட வேளையிலேயே தமிழ் ஆயதபாணிகளால் தீக்கிரை யாக்கப்பட்டது. அத்துடன் முஸ்லிம் நபர்கள் காணாமற் போவதும் அவர்களது உட மைகள் கடத்தப் படுவதும் தமிழ் பிரதேசங்களிலேயே இடம்பெற்று வருகின்றன.

ஏனவே களநிலைமை இவ் வாறு இருக்கும் போது முஸ் லிம் பகுதிகளில் மாத்திரம் பாதுகாப்பை பலப் படுத்துவது முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியதாக அமையாது. முஸ்லிம் கிராமங்கள் மீதான தமிழ் ஆயதபாணிகளின் தாக்குதல்களை தடுப்பதற்கு முஸ்லிம் பகுதிகளில் பாதுகாப்பை பலப்படுத்துவதோ மேலதிக முஸ்லிம் பொலிஸாரை நியமிப்பதோ பயனள்ளதாக அமையும். ஆனால் இங்குள்ள கேள்வி முஸ்லிம்களின் பாதுகாப்பு பெருமள வில் அச்சுறுத்தப்படுவது தமிழ்ப் பகுதிகளிலேயேயாகும். எனவே தமிழ்ப் பகுதிகளில் முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அரசு மேற்கொள்ளும் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ன என்பதே.

முஸ்லிம் பகுதிகளில் அரசு மேற்கொள்ளும் பாதுகாப்பு நடவடிக்கைகளை விடுதலைப் புலிகளும், தமிழ் அரசியற் பிரதிநிதிகளும் பயங்கரமாக எதிர்த்துக் கூக்குரல் எழுப்பும் போது தமிழ்ப் பகுதிகளில் அரசு மேற் கொள்ளும் நடவடிக்கைகளை நிச்சயமாக யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயல் என குற்றஞ் சுமத்துவர். ஏனவே முஸ்லிம்களின் பாதுகாப்பு என்பது சமாதான நடவடிக்கைகளின் முக்கியமான ஓர் அம்சம் என்பது தெளிவானது. ஆகவே, முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது, சமாதான நடவடிக் கைகளில் முஸ்லிம்களுக்குரிய பாத்திரத்தை வழங்குவது அரசு சமாதான நடவடிக்கைகளை எடுக்க முற்படுவதானது, தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையிலான சமாதான நடவடிக்கைகள் வெற்றிபெற வேண்டுமென் பதற்காக முஸ்லிம்களை பலியிடுவதற்குச் சமனான ஒரு செயலாகும்.

ஏனவே சமாதானத்துக்கு முன்னராக இலங்கை முஸ்லிம்கள் இந்நாட்டுப் பிரஜைகள் என்ற வகையில் அவர்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்துவது அரசின் தலையாய கடமையாகும். இந்த வகையில் முஸ்லிம்களின் பாதுகாப்புத் தொடர்பில் விடுதலைப் புலிகள் சம்பந்தப் பட்டிருப்பதால் விடுதலைப் புலிகளிற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதும் முஸ்லிம்களின் பாதுகாப்பு தமிழ்ப் பிரதேசங்கள் அச்சுறுத்தல் களுக்குள்ளாகி இருப்பதால் அப்பிரதேசங்களில் பாதுகாப்பைப் பலப்படுத்துவதும் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதும் அரசின் கடமையாகும்.

இத்தகைய நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமே அரசு முஸ்லிம்களின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்த முடியும். மாறாக முஸ்லிம் களை அமைதியாக இருக்குமாறும், சமாதானத்தை விரும்பாதவர்களின் செயற்பாடு களுக்கு துணைபோக வேண்டாம் என அறிக்கை விடுவதன் மூலம் அல்லது முஸ்லிம் பிரதேசங் களில் பாதுகாப்பை பலப்படுத்துவதின் மூலம் அரசு முஸ்லிம்கள் மீதுள்ள தனது தார்மீகக் கடமையை நிறைவேற்றியதாகக் கருத முடியாது.

அரசு மேற்கொள்ளும் இத்தகைய நடவடிக் கைகள் சமாதான நடவடிக்கைகளுக்கு ஊறு விளைவிப்பதாக அமையுமானால், அல்லது புரிந்துணர்வு ஒப்பந்த்திற்கு முரணாக அமையுமானால் சமாதான நடவடிக்கைகளையும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கும் வகையில் மாற்றியமைக்க வேண்டும். அத்தகையதொரு நிலையில் முஸ்லிம்களின் பாதுகாப்புத் தொடர்பில் விருதலைப் புலிகளை காத்திரமான பங்களிப்பு வழங்கச் செய்ய முடியும்

# அத்தியாயம் –2

## முஸ்லிம்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள்

# 1. உடலியல் ரீதியானவை

1.1. கொலை

1.2. காணாமல் போதல்

1.3. கடத்தப்படல் / தடுத்து வைக்கப்படல்

1.4. தனி நபர்கள் / குழுக்கள் மீதான தாக்குதல்

1.5. சித்திரவதை

# 1.1. கொலைகள்

01. இடம் : மூதூர்

திகதி : 31.12.2002

மூதூர் கடற்பரப்பில் சிறு வள்ளத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த யாக்கூப் ஜவாத் (35) கடற்படையின் அதிவேக இயந்திரப் படகினால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டார்.

02. இடம் : வாழைச்சேனை

திகதி : 05.12.2002

முஹம்மது அஸீஸ் 20க்கு மேற்பட்ட தடவைகள் சுடப்பட்டு படுமோசமான நிலையில் கொல்லப் பட்டுள்ளார்.

03. இடம் : வாழைச்சேனை

திகதி : 04.01.2003

ஆட்டோ சாரதியான முஹம்மது ஹுசைன் சில தமிழ் இளைஞர்களால் கல்மடுவில் வைத்து கடத்தப்பட்டு கழுத்து வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

04. இடம் : வாழைச்சேனை

திகதி : 27.06.2002

அப்துல் கபூர் ஸஹாப்தீன் அன்று கிரனட் வீசி கொல்லப்பட்டார்.

05. இடம் : வாழைச்சேனை

திகதி : 27.06.2002

முஹம்மது ஹனீபா முஹம்மது ஸலீம் கிரனட் வீசி கொல்லப்பட்டார்.

06. இடம் : வாழைச்சேனை

திகதி : 27.06.2002

ஆதம் லெப்பை ஹாஜா முஹையதீன் கிரனைட் வீச்சில் கொலை செய்யப்பட்டார்.

07. இடம் : வாழைச்சேனை

திகதி : 28.06.2002

இஸ்மாயில்பரீட் கிரனட் வீசி கொலை செய்யப்பட்டார்.

08. இடம் : வாழைச்சேனை

திகதி : 27.06.2002

ஹயாத்து முஹம்மது ஜனுதீன் முஹம்மது தமிழ்ப் பகுதிக்கு அன்று சமையல் பணிக்காகச் சென்றபோது அங்கு கொலை செய்யப்பட்டு அவரது உடல் எரிக்கப்பட்டது.

09. இடம் : வாழைச்சேனை

திகதி : 27.06.2002

ஹயாத்து முஹம்மது ஜனுஸ்தீன் தமிழ்ப்பகுதிக்கு அன்று சமையல் பணிக்காக சென்றபோது. அங்கு கொலை செய்யப்பட்டு அவரது உடல் எரிக்கப்பட்டது.

10. இடம் : வாழைச்சேனை

திகதி : 27.06.2002

முஹம்மது அன்வர் துப்பாக்கியால் சுடப்பட்டடு கொல்லப்பட்டார்.

11. இடம் : தோப்பூர்

திகதி : 01.07.2003

தோப்பூர் பிரதேசத்தைச் சேர்ந்த முகம்மது பரீட் (39) இனம் தெரியாதோரால் அவரது வீட்டில்வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்

12. இடம் : தோப்பூர்

திகதி : 17.04.2003

முஹம்மது தீன் தமிழ் ஆயுதபாணிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

13. இடம் : தோப்பூர்

திகதி : 21.04.2003

ஸதகதுல்லா றசாலிஹ் துப்பாக்கியால் சுடப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

14. இடம் : தோப்பூர்

திகதி : 22.04.2003

செய்னுலாப்தீன் மீராலெப்பை கழுத்து வெட்டி கொலை செய்யப்பட்டார்.

15. இடம் : தோப்பூர்

திகதி : 03.08.2003

ஜின்னா நகரைச் சேர்ந்த றிழ்வான்(23) அதிகாலையில் தனது தேனீர் கடையைத் திறந்து ஆயத்தம் செய்து கொண்டிருந்த போது. துப்பாக்கி நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

16. இடம் : திருமலை

திகதி : 13.08.2003

மூதூரைச் சேர்ந்த அப்துல் குத்தூஸ் பரீட் (35) செல்வநாயகபுரத்தில் வைத்து தமிழ் ஆயுத பாணிகளால் சுடப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

17. இடம் : திருமலை

திகதி : 13.08.2003

மூதூரைச் சேர்ந்த முஹம்மது றியாஸ் (27) செல்வநாயகபுரத்தில் வைத்து தமிழ் ஆயுத பாணிகளால் சுடப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

18. இடம் : சம்மாந்துறை

திகதி : 17.08.2003

சேனைவட்டைப் பகுதியிலுள்ள நெற்காணிக்குச் சென்று விட்டு, மோட்டார் சைக்கிள் திரும்பிக் கொண்டிருந்த போது ஆதம்பாவா இப்றாலெப்பை (40), ஆயுத பாணிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

19. இடம் : சம்மாந்துறை

திகதி : 17.08.2003

சேனைவட்டைப் பகுதியிலுள்ள நெற்காணிக்குச் சென்று விட்டு, மோட்டார் சைக்கிள் திரும்பிக் கொண்டிருந்த போது கலந்தர் லெப்பை இஸ்மாயில் (28), ஆயுத பாணிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

20. இடம் : கிண்ணியா

திகதி : 23.11.2003

எம்.எச்.நசூருதீன் (30) விடுதலைப் புலிகளின் கிரனைட் வீச்சினால் கொலை செய்யப்பட்டார்

21. இடம் : கச்சக்கொடிதீவு

திகதி : 24.11.2003

ஐ.நூர்தீன் (40) விடுதலைப் புலிகளின் மரக்கறி லொறி மீதான குண்டு வீச்சில் கொலை செய்யப்பட்டார்

22. இடம் : கச்சக்கொடிதீவு

திகதி : 24.11.2003

ரீ.அப்துல் அஸாம் (26) விடுதலைப் புலிகளின் மரக்கறி லொறி மீதான குண்டுத் வீச்சில் கொலை செய்யப்பட்டார்

23. இடம் : கிண்ணியா

திகதி : 28.11.2003

ஏ.எம்.சுபைர் (56) நடுவூற்றுப் பிரதேசத்தில் உள்ள தனது விவசாயத்துக்கு காவலுக்குச் சென்றிருந்த போது விடுதலைப் புலிகளினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்

24. இடம் : கிண்ணியா

திகதி : 28.11.2003

எம்.எப்.ஏ.ஹஸன் (61) நடுவூற்றுப் பிரதேசத்தில் உள்ள தனது விவசாயத்துக்கு காவலுக்குச் சென்றிருந்த போது விடுதலைப் புலிகளினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்

25. இடம் : கிண்ணியா

திகதி : 28.11.2003

என்.பளீல் (52) நடுவூற்றுப் பிரதேசத்தில் உள்ள தனது விவசாயத்துக்கு காவலுக்குச் சென்றிருந்த போது விடுதலைப் புலிகளினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்

26. இடம் : கிண்ணியா

திகதி : 30.11.2003

எம்.எஸ்.சக்கரியா (51) தனது பிரதேசத்தில் விடுதலைப் புலிகளினால் கிரனைட்வீசப்பட்ட போது அதனை தனது வீட்டிலிருந்து ஜன்னலினூடாகப் பார்வையிட்டபோது விடுதலைப் புலிகளின் உறுப்பினரால் சுடப்பட்டு கொல்லப்பட்டார்.

27. இடம் : கிண்ணியா

திகதி : 01.12.2003

ஜெலீல் என்பவர் மோட்டார் சைக்களில் வந்த விடுதலைப் புலி உறுப்பினர்களால் சுடப்பட்டு கொல்லப்பட்டார்.

28. இடம் : ஏறாவூர்

திகதி : 01.12.2003

ஏறாவூர் வைத்தியசாலையில் கடமைபுரியும் சுலைமான் லெப்பை பாருக் (27) வைத்திய சாலையில் வைத்து சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

29. இடம் : அக்கரைப்பற்று

திகதி : 03.12.2003

அக்கரைப்பற்று, பள்ளிக்குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த சாஹுல் ஹமீத் (40) இனம் தெரியாதோரால் சுடப்பட்டு கொல்லப்பட்டார்.

30. இடம் : அக்கரைப்பற்று

திகதி : 03.12.2003

அக்கரைப்பற்று, பள்ளிக்குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த சாலித் தம்பி உவைஸ் (21) இனம் தெரியாதோரால் சுடப்பட்டு கொல்லப்பட்டார்.

## 1.2. காணாமல் போதல் (காணாமல் போனவர்கள்)

01. இடம் : மட்டக்களப்பு

திகதி : 06.02.2002

முஹம்மது நிசாம் (41), 60-7899 சிவப்பு நிற வாகனத்தில் தமிழர்களால் கொழும்பில் வைத்து வாடகைக்கு அமர்த்தப்பட்டு மட்டக்களப்பு நோக்கிச் சென்றபோது வாகனத்துடன் கடத்தப்பட்டு காணாமற் போயுள்ளனர்.

02. இடம் : மட்டக்களப்பு

திகதி : 06.02.2002

முஹம்மது இம்தியாஸ் (31) 60-7899 சிவப்பு நிற வாகனத்தில் தமிழர்களால் கொழும்பில் வைத்து வாடகைக்கு அமர்த்தப்பட்டு மட்டக்களப்பு நோக்கிச் சென்றபோது வாகனத்துடன் கடத்தப்பட்டு காணாமற் போயுள்ளனர்.

03. இடம் : மட்டக்களப்பு

திகதி : 17.02.2002

எம்.எஸ்.எம். சஹாப்தீன் (49) 54-8550 வெள்ளை நிற டொல்பின் வேனில் தமிழர்களால் கொழும்பில் வைத்து வாடகைக்கு அமர்த்தப்பட்டு வாழைச்சேனை நோக்கிச் சென்றபோது வாகனத்துடன் கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளனர்.

04. இடம் : மட்டக்களப்பு

திகதி : 17.02.2002

எம்.அமீர் (25) 54-8550 வெள்ளை நிற டொல்பின் வேனில் தமிழர்களால் கொழும்பில் வைத்து வாடகைக்கு அமர்த்தப்பட்டு வாழைச்சேனை நோக்கிச் சென்றபோது வாகனத்துடன் கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளனர்.

05. இடம் : மருதமுனை

திகதி : 22.08.2002

மருதமுனையைச் சேர்ந்த முஹம்மது நாகூர்(32) என்பவருக்குச் சொந்தமான 201-2754 இலக்கமுடைய முச்சக்கர வண்டி தமிழ் இளைஞர்களால் வாடகைபடுத்தப்பட்டு தமிழ் பகுதிக்குச் சென்ற போது முச்சக்கர வண்டியுடன் உரிமையாளரும் காணாமல் போயுள்ளார்.

06. இடம் : மட்டக்களப்பு

திகதி : 08.09.2002

புத்தளம் 11வது வீதியைச் சேர்ந்த எம்.ஏ.ஆர்.நுவைஸ் 59-1908 வாகனத்தில் கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்குச் செல்லும் வழியில் ஓட்டமாவடி காவல் நிலையத்திற்கு அப்பால் வாகானத்துடன் கடத்தப்பட்டார் காணாமற்போயுள்ளார்.

07. இடம் : வாழைச்சேனை

திகதி : 27.06.2002

ஹயாத்து முஹம்மது முஹம்மது ஹுசைன் கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளார்.

08. இடம் : வாழைச்சேனை

திகதி : 27.06.2002

முஹம்மது அபூபக்கர் ஹயாத்து முஹம்மது கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளார்.

09. இடம் : வாழைச்சேனை

திகதி : 27.06.2002

ஹயாத்து முஹம்மது கலீலுர் ரஹ்மான் கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளார்.

10. இடம் : வாழைச்சேனை

திகதி : 27.06.2002

பஷீர் முஹம்மது அஜ்வத் கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளார்.

11. இடம் : மூதூர்

திகதி : 29.03.2003.

அப்துல் ரஸாக் ஜாபிர், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான கடற்கரைச்சேனை பகுதிக்குச் சென்றபோது காணாமல் போயுள்ளனர்.

12. இடம் : மூதூர்

திகதி : 29.03.2003.

மக்பூல் நயீம், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான கடற்கரைச்சேனை பகுதிக்குச் சென்றபோது காணாமல் போயுள்ளனர்.

13. இடம் : ஆசாத் நகர்

திகதி : 17.04.2003

எம்.ஐ.அலியார். என்பவர் காணாமற் போனயுள்ளார்

14. இடம் : வாழைச்சேனை

திகதி : 09.06.2003

ஆத்துச்சேனை வயற் பகுதியில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த முஹம்மது கஸ்ஸாலி என்பவர் விடுதலைப் புலி

உறுப்பினரால் கடத்தப்பட்டு காணாமற் போயுள்ளார்.

15. இடம் : கிண்ணியா

திகதி : 20.06.2003

கால் நடைப் பண்ணையாளர் அப்துல் லதீப் தமிழ் ஆயுதபாணிகளால் கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளார்.

16. இடம் : வாழைச்சேனை

திகதி : 27.06.2003

நெய்னா முஹம்மது அபூசாலி என்பவர் கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளார்.

17. இடம் : சித்தாண்டி

திகதி 17.08.2003

சாய்ந்தமருதைச் சேர்ந்த ஆதம்பாவா மன்சூர் (28) வாழைச்சேனைக்கு சென்று 154-2871 இலக்க மோட்டார் சைக்கிளில் ஊர் திரும்புகையில் சித்தாண்டிப் பிரதேசத்தில் வைத்து காணாமல் போயுள்ளனர்.

18. இடம் : சித்தாண்டி

திகதி 17.08.2003

சாய்ந்தமருதைச் சேர்ந்த முஹம்மது இல்யாஸ் (30) வாழைச்சேனைக்கு சென்று 154-2871 இலக்க மோட்டார் சைக்கிளில் ஊர் திரும்புகையில் சித்தாண்டிப் பிரதேசத்தில் வைத்து காணாமல் போயுள்ளனர்.

## 1.3. கடத்தப்படல் / தடுத்து வைக்கப்படல்

01. இடம் : வந்தாருமூலை

திகதி : 02.09.2002

48-2913 எனும் இலக்கத்தையுடைய லொறியில் உதவியாளராக கடமை புரிபவர் நெல் கொள்வனவு செய்து கொண்டுவரும் லெறியுடன் திரும்பிக் கொண்டிருக்கையில் வந்தாரு மூலையில் புலிகளின் உறுப்பினர்களால் வழி மறிக்கப்பட்டு நெல் மூடைகளுக்கு கப்பம் செலுத்த மறுத்தபோது புலிகளால் லொறியுடன் தடுத்து வைக்கப்பட்டார்.

02. இடம் : மூதூர்

திகதி : 25.03.2003

மூதூர் காட்டுப்பகுதிக்கு விறகு எடுக்கச் சென்ற 7 வண்டில்களும் 5 முஸ்லிம் நபர்களும் கப்பம் செலுத்துமாறு கோரி விடுதலைப் புலி உறுப்பினர்களால் தடுத்து வைக்கப்பட்டனர் பின்னர் வண்டில் ஒன்றுக்கு 2000 தொடக்கம் 2500 ரூபா வரை கப்பம் செலுத்தப்பட்டு வண்டில்களும் தடுத்துவைக்கப்பட்டவர்களும் விடுவிக்கப் பட்டனர்.

03. இடம் : மூதூர்

திகதி : 15.07.2003

மாட்டு வண்டில் உரிமையாளர் முஹம்மது நியாஸ் இரக்ககண்டிப் பகுதியில் வைத்து விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டு 15.000 ரூபா கப்பம் செலுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டார்.

## 1.4. தனி நபர்கள் / குழுக்கள் மீதான தாக்குதல்

01. இடம் : திருகோணமலை

திகதி : 27.06.2002

முபாரக் என்பவர் காளிக்கோவிலுக்கு அருகாமையில் வைத்து முச்சக்கர வண்டியில் வந்த ஒரு குழுவினரால் தாக்கப்பட்டு வண்டியில் ஏற்றிச் செல்ல முற்பட்டபோது தன்னை விடுவித்துக் கொண்டு தப்பித்துள்ளார்.

02. இடம் : வாழைச்சேனை

திகதி : 27.06.2002

செம்மண்னோடை ஜும்மாஆப் பள்ளிவாயலில் ஊர்வாசிகள் ஜும் ஆத் தொழுகையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில் விடுதலைப் புலி சந்தேக நபர்களால் கிரனைட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

03. இடம் : திருகோணமலை

திகதி : 28.06.2002

திருகோணமலை ட்டே. வீதியிலுள்ள இரு முஸ்லிம் இளைஞர்கள் மோட்டார் சைக்கிலில் சென்றுகொண்டிருக்கையில் ஆயுதம் தரித்த தமிழ் இளைஞர்களால் பலாத்காரமாக வழி மறிக்கப்பட்டபோது அவர்கள் விரைவாக வண்டியைச் செலுத்தி தப்பித்துள்ளனர்.

04. இடம் : திருகோணமலை

திகதி : 29.06.2002

விகாரை வீதியில் வசித்துவரும் அக்குரனையைச் சேர்ந்த தந்தையும் மகனும் நித்திரை செய்து கொண்டிருக்கையில் வீட்டினுள் நுழைந்த தமிழ் ஆயுத பாணிகளால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

05. இடம் : ஏறாவூர்

திகதி : 01.07.2002

ஏறாவூர் காளிக் கோவில் வீதியில் வசிக்கும் முஸ்லிம் நபர் பொருள் வாங்குவதற்காக கடைக்குச் சென்று கொண்டிருக்கும்போது செல்வி சினிமாத்தியட்டருக்கு அருகில் வைத்து இரு தமிழ் இளைஞர்களால் தடிகளினால் மிகப் பலமாக தாக்கப்பட்டார்

06. இடம் : சித்தாண்டி

திகதி : 03.07.2002

ஏறாவூர் புன்னைக்குடாவைச் சேர்ந்த இபுறாஹிம் மீராசாகிபு சித்தாண்டிக்குச் சென்று ஏறாவூருக்குத் திரும்பும் வழியில் தமிழ் ஆயுத பாணிகளால் தூசன வார்த்தைகளால் தூசிக்கப்பட்டு தாக்கப்பட்டார்.

07. இடம் : சித்தாண்டி

திகதி : 05.07.2002

ஏறாவூர், மிச் நகர் முதலாம் குறுக்கு வீதியில் வசிக்கும் முஹம்மது முஸ்தபா கிரானில் வியாபாரத்தில் ஈடுபட்டுவிட்டு திரும்புகையில் சித்தான்டி குறுக்கு வீதியில் வைத்து விடுதலைப் புலி உறுப்பினர்களால் தடியாலும் ஆயுதங்களாலும் பலமாகத் தாக்கப்பட்டார்.

08. இடம் : ஓட்டமாவடி

திகதி : 14.09.2002

ஓட்டமாவடியிலிருந்து கிண்ணையடி எனும் தமிழ் பிரதேசத்திற்கு எம்.எஸ். அப்துல் ஸலாம் என்பவருடைய 206-1307 இலக்கமுடைய முச்சக்கர வண்டி தமிழ் சகோதரர்கள் வாடகைக்கு அமர்த்திச் சென்றபோது கிண்ணையடியில் வைத்து வழி மறித்த 3 தமிழ் இளைஞர்கள் அதில் சென்றவர்களையும், முச்சக்கரவண்டியையும் தாக்கினர்.

09. இடம் : ஏறாவூர்

திகதி : 11.10.2002

ஏறாவூரைச் சேர்ந்த முஸ்லிம் நபர் ஒருவர் தனது உழவு இயந்திரத்தை திருத்தும் பணியில் ஈடுபட்ட தமிழ் சகோதரர் ஒருவரை திருத்தற் பணி முடிவடைந்ததன் பின்னர் தமிழ் பகுதியில் உள்ள அவரது வீட்டில் விட்டுவிட்டு வரும் வழியில் தமிழ் குழு ஒன்றினால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

10. இடம் : திருகோணமலை

திகதி : 11.11.2002

திருகோணமலை கடல் பிராந்தியத்தில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு அவர்களது இயந்திரப்படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன. இதில் சிங்களவர்களுக்குச் சொந்தமான 3 படகுகளை பொலிசார் விடுவித்த போதும் முஸ்லிம்களுக்கு சொந்தமான 8 படகுகளை தடுத்துவைத்ததுடன் முஸ்லிம்மீனவர்களை பொலிசார் தாக்கியுள்ளனர்.

11. இடம் : மூதூர்

திகதி : 05.04.2003

உப்பூரல் பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்ட முஸ்லிம் மீனவர்கள் தமிழ் ஆயுத பாணிகளால் தாக்கப்பட்டனர்.

12. இடம் : தோப்பூர்

திகதி : 05.04.2003

ஊப்பூரல் ஆற்றில் மீன் பிடிக்கச் சென்ற முஸ்லிம் மீனவர்கள் தமிழ் ஆயுத பாணிகளால் படுமோசமாகத்தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவ்வாயுதபாணிகள் அவர்களின் வள்ளங்களைப் பறிமுதல் செய்யதனர்.

13. இடம் : மூதூர்

திகதி : 08.04.2003

உப்பூல் கடற்கரைப் பகுதியில் உள்ளாசமாக பொழுதைக் கழித்துக் கொண்டிருந்த முஸ்லிம் மாணவர்கள் அவ்விடத்திற்கு வந்த தமிழ் ஆயுதபாணிகளால் தாக்கப்பட்டனர்.

14. இடம் : மூதூர்

திகதி : 17.04.2003

மூதூரைச் சேர்ந்த இரு முஸ்லிம் இளைஞர்கள் பள்ளித்திடலில் வைத்து தமிழ் ஆயுதபாணிகளால் தாக்கப்பட்டனர்.

15. இடம் : மூதூர்

திகதி : 15.05.2003

தாஹா நகரைச் சேர்ந்த முகம்மது பரீட்(39) என்ற மீனவரை, நாவலடி ரஞ்சன், கிருபா, சகாயன், ரூபன் ஆகியோர் துப்பாக்கிகளைக் காட்டி இது தமிழர்களின் பிரதேசம் இங்கு முஸ்லிம்கள் மீன் பிடிக்கக்கூடாது என விரட்டி விரட்டியடித்தனர்

16. இடம் : மூதூர்

திகதி : 18.05.2003

ஆசாத் நகரைச் சேர்ந்த ஹயாத்து முஹம்மது ஜிப்ரி தயிர்வாடி எனும் இடத்தில் வைத்து தமிழ் இளைஞர்களின் வாள் வீச்சுக்கு இலக்காகி இராணுவ சோதனை நிலையத்தில் தஞ்சமடைந்தார்.

17. இடம் : மூதூர்

திகதி : 24.05.2003

தக்வா நகரைச் சேர்ந்த முகைதீன் தம்பி ரஸ்மி (22) கங்கை முகத்துவார பகுதியில் தமிழ் ஆயுத பாணிகளால் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டு அப்பகுதியிலிருந்து விரட்டி அடிக்கப்பட்டார்.

18. இடம் : வாழைச்சேனை

திகதி : 15.06.2003

வழைச்சேனை சந்தைப் பகுதி மீது தமிழ் இளைஞர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட கிரனைட் தாக்குதலில் 5 முஸ்லிம்கள் காயத்திற்குள்ளாகினர்.

19. இடம் : வாழைச்சேனை

திகதி : 26.06.2003

முஸ்லிம் நபர் ஒருவருக்குச் சொந்தமான கடை மீது தமிழ் இளைஞர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் அக்கடை சேதத்திற்குள்ளாகியதுடன் ஒரு நபர் காயத்திற்குள்ளானார்.

20. இடம் : மூதூர்

திகதி : 06.07.2003

அக்கரைச் சேனையை ஐ. இப்ராஹிம் சேகுநூர்தீன் (43), ஐ. முகம்மது சத்தார் (33) ஆகிய இரு விவசாயிகள் பச்சைநூர் வயல் பிரதேசத்தில் வைத்து அந்தோணி செல்வா, மூர்த்தி குமார் என்ற இரு மறவர் படை உறுப்பினர்களால் தாக்கப்பட்டு காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்கள்.

21. இடம் : மூதூர்

திகதி : 14.07.2003

சுபைர் அறபாத் என்ற நபர் வீட்டிலிருக்கையில் ஆயுத பாணிகாளால் சுடப்பட்டு வைத்தியசலையில் அனுமதிக்கப்பட்டார்.

22. இடம் : வாழைச்சேனை

திகதி : 10.08.2003

காவத்தைமுனையைச் சேர்ந்த ஹனிபா என்பவருக்குச் சொந்தமான 26-6083 இலக்க உழவு இயந்திரத்தை விடுதலைப் புலி உறுப்பினர்கள் கடத்த முற்பட்ட போது அதன் உரிமையாளர் ஆட்சேபித்த போது விடுதலைப் புலி உறுப்பினர்களால் அவர் பலமாக தாக்கப்பட்டதோடு உழவு இயந்திரமும் தாக்கப்பட்டு சேதப்படுத்தப் பட்டது.

23. இடம் : ஏறாவூர்

திகதி : 03.09.2003

ஆட்டோவில் பிரயாணம் செய்த ஒரு பெண்ணும் இரு ஆண்களுமாக ஏறாவூரில் வைத்து துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமுற்றனர்.

24. இடம் : வாழைச்சேனை

திகதி : 04.09.2003

வாழைச்சேனையில் பாதையோர வியாபாரத்தில் ஈடுபடும் முஸ்லிம் வியாபாரி தனது வீட்டுக்குச் சென்றதன் பின் அவரின் வீட்டுக்கு கைக்குண்டு வீச்சு மேற்கொள்ளப்பட்டதில் அவரும் அவரின் மனைவியும் காயத்திற்குள்ளானார்கள்.

25. இடம் : திருகோணமலை

திகதி : 16.10.2003

விறகு எடுப்பதற்காக வண்டிலில் காட்டுக்குப் பகுதிக்குச் சென்ற சேகு அப்துல் காதர் நளீம்(31) ஜமால் ஜெஸீன்(22) ஆகிய இருவர் விடுதலைப் புலிகளால் பலமாகத் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டனர். இவர்களது வண்டில்கள் விடுதலைப் புலிகளால் பறிமுதல் செய்யப்பட்டது.

22. இடம் : திருகோணமலை

திகதி : 26.10.2003

திருமலையிலிருந்து மூதூருக்குச் சுமைகளுடன் சென்று கொண்டிருந்த லொறி தமிழ் பகுதியில் ஆயுதபாணிகளால் வழிமறிக்கப்பட்டு அதில் உள்ள பொருட்கள் சூரையாடப்பட்டது. அதில் பயணம் செய்த முஹம்மது ஹனீபா(60), அசனார் லெப்பை ஜெயினுதீன்(30), முஹம்மது நியாஸ்(26), முஹம்மது நிம்ஸாத்(24) நாகூர் பிச்சை கரீம்(32) ஆகியோர் அவ்வாயித பாணிகளால் தாக்கப்பட்டனர்.

# 1.5. சித்திரவதை

01. இடம் : ஏறாவூர்

திகதி : 23.07.2002

ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் இருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த முஸ்லிம் பொலிஸ் கான்ஸ்டபிள் சித்தி தமிழ் ஆயுதபாணிகளால் கடத்தப்பட்டுசித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டார்.

02. இடம் : மூதூர்

திகதி : 07.07.2003

நாவலடி கங்கை முகத்துவாரப் பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற தக்வா நகரைச் சேர்ந்த மீனவர்களான ஏ.ஆர். ஜுனைது (43), கே.எம். ஜலீல் (36), டபிள்யு.எம். றிஸ்பின் (23) ஆகியோர் விடுதலைப் புலிகளின் நாவலடிப் பொறுப்பாளரான ரஞ்சன்,கிருபா,சகாயம் ஆகியோரினால் ஏ.கே 47 ரக துப்பாக்கி மூலம் மிரட்டப்பட்டு நாவலடி கரைப்பகுதிக்கு இழுத்துச்செல்லப்பட்டனர். பின்னர் அவ்விடத்தில் வைத்து மிகக் கொடூரமான முறையில் சித்திரவதை மற்றும் உள இம்சைகளுக்கு உள்ளாக்கப்பட்டு பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டனர்.

18. இடம் : அக்கரைப்பற்று

திகதி : 16.08.2003

மூதூரைச் சேர்ந்த 48 வயதான ராசிக், 15 வயதான பைரூஸ் ஆகிய தந்தையும், மகனும் சின்ன கங்கை முறிஞ்ச முகத்துவாரம் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளை விடுதலைப் புலி உறுப்பினர்களால் கடத்திச் செல்லப்பட்டு, சித்திரவதைக்குட்படுத்தப்பட்டனர்.

# உ. பொருளாதார ரீதியானவை

2.1. வாகன அபகரிப்பு / கடத்தல்

2.2. கால் நடை அபகரிப்பு / கடத்தல்

2.3. உடமைகள் அபகரிப்பு

2.4. உடமைகள் மீதான தாக்குதல் / தீவைப்பு

2.5. வரி, கப்பம் அறவீடு

2.6. ஏனையவைகள்

# 2.1. வாகன அபகரிப்பு / கடத்தல்

01. இடம் : காத்தான்குடி

திகதி : 14.03.2002

கல்முனை காத்தான்குடிக்கிடைப்பட்ட கடற்பரப்பில் காத்தான்குடி 11 முஸ்லிம் மீனவர்களுக்குச் சொந்தமான படகுகள், வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் தமிழ் ஆயுத பாணிகளால் பலாத்காரமாக அபகரிக்கப்பட்டது.

02. இடம் : கிண்ணியா

திகதி : 16.03.2002

விறகு எடுப்பதற்காக காட்டுப் பகுதிக்குச் சென்ற ஏழை முஸ்லிம்களுக்குச் சொந்தமான 6 வண்டில்கள் ஆயுதபாணிகளால் கடத்தப்பட்டு அவற்றை விடுவிப்பதற்காக வேண்டி அவர்களால் கப்பம் கோரப்பட்டது.

03. இடம் : கிண்ணியா

திகதி : - - -.03.2002

கிண்ணியாவைச் சேர்ந்த முஸ்லிம் நபருக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிள் ஆயுதபாணிகளால் அபகரித்துச் செல்லப்பட்டது.

04. இடம் : சம்மாந்துறை

திகதி : 11.04.2002

மீராலெப்பை லாபீர் சாம்பல்வட்டையில் உள்ள தனது வயலுக்குச் சென்று திரும்பி வரும் வழியில் அல்லி முல்லைப் எனும் இடத்தில் இடைமறித்த ஆயுதம் தரித்த இரு புலி உறுப்பினர்கள் அவருக்குச் சொந்தமான CD-50 ரக EP.GL-3360 எனும் இலக்கமுடைய மோட்டார் சைக்கிளை அபகரித்துச் சென்றனர்.

05. இடம் : வாகரை

திகதி : 22.04.2002

முஸ்லிம் மீனவர்களுக்குச் சொந்தமான 16 படகுகள் வாகரை ஏரியில் வைத்து தமிழ் ஆயுதபாணிகளால் பலாத்காரமாக பறிமுதல் செய்யப்பட்டது.

06. இடம் : அக்கரைப்பற்று, அம்பாறை

திகதி : 12.06.2002

212, அரசடி வீதி, அக்கரைப்பற்றில் வசிக்கும் AL.கதீர் என்பவருக்குச் சொந்தமான EPGO 2370 இலக்கத்தையுடைய ELF – Tipper ரக பார வாகனம் விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டது. உரிமையாளர் விடுதலைப் புலிகளின் ஆலையடிவேம்பு அலுவலகத்தில் இது தொடர்பாக முறைப்பாடு செய்தபோது 2 இலட்சம் ரூபா கப்பம் செலுத்தி வாகனத்தை எடுத்துச் செல்லுமாறு வேண்டப்பட்டுள்ளார்.

07. இடம் : சம்மாந்துறை

திகதி : 16.06.2002

பெரிய நீலாவனை கிளினிக்கில் சேவை புரியும் வைத்தியர் உவைசுல் பாரிக்கு சொந்தமான Hero Honda சிவப்பு நிற மோட்டார் சைக்கில் மருதமுனைக்கும் நீலாவனைக்கும் இடைப்பட்ட பகுதியில் விடுதலைப் புலி உறுப்பினர்களால் கடத்தப்பட்டது.

08. இடம் : ஏறாவூர்

திகதி : 17.06.2002

ஏறாவூர் முஸ்லிம் மீனவர்கள் ஏரியில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும் போது அவர்களுக்குச் சொந்தமான 35 தோனிகளையும் மீன்பிடி உபகரணங்களையும் விடுதலைப் புலிகள் அபகரித்துச் சொன்றுள்ளதாக ஏறாவூர் கிராம மீனவர் கூட்டுறவுச் சங்கத்தினால் முறைப்பாடு செய்துள்ளது.

09. இடம் : பொத்துவில்

திகதி : 21.06.2002

பொத்துவில் நாகாமம் பகுதிக்கு பலாப்பழம் பறிக்கச் சென்ற ஒரு முஸ்லிம் நபருக்குச் சொந்தமான ஒரு இரு சக்கர உழவு இயந்திரமும் மேலும் மற்றுமொரு சம்பவத்தில் இரண்டு மாட்டி வண்டில்களும் விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டது.

10. இடம் : செங்கல்லடி

திகதி : 01.07.2002

சத்தார் என்பவருக்குச் சொந்தமான பஸ் வண்டி பயணிகளுடன் கொழும்பிலிருந்து ஏறாவூருக்குச் செல்லும் வழியில் வந்தாறு மூலையில் வைத்து கல் வீச்சுக்கு இலக்காகியது

11. இடம் : அக்கரைப்பற்று

திகதி : 08.07.2002

அபுல்ஹசன் சபீனா எனபவருக்குச் சொந்தமான வாகனம் விடுதலைப் புலிகளினால் பறிமுதல் செய்யப்பட்டு அதனை மீள் அழிப்பதற்காக இரண்டு லட்சம் ரூபா கப்பம் கோரப்பட்டுள்ளது.

12. இடம் : அக்கரைப்பற்று

திகதி : 09.07.2002

அக்கரைப்பற்றைச் சேர்ந்த பரக்கத் அலி என்பவருக்குச் சொந்தமான இரண்டு மீன்பிடி இயந்திரப்படகுகள் மீனவர்களுடன் மீன்பிடிக்கச் சென்றபோது, (6பேர்) அவர்கள் மீது விடுதலைப் புலி உறுப்பினர்கள் துப்பாக்கி பிரயோகம் செய்து பட்கிலிருந்தவர்களை கடலில் தள்ளிவிட்டு இயந்திரப்

படகுகள் இரண்டையும் அபகரித்துச் சென்றனர்.

13. இடம் : மூதூர்

திகதி : 12.07.2002

ஷாபி நகர் கிராமத்ததைச் சேர்ந்த ஏழை முஸ்லிம்கள் காட்டுக்குச் சென்று தங்களது வண்டில்களில் விறகு எடுத்துக் கொண்டு வரும் வழியில் விடுதலைப் புலி உறுப்பினாகளால் வழிமறிக்கப்பட்டு அவர்களது 10 வண்டில்களும் விடுதலைப் புலிகளால் பலாத்காரமாகக் கொண்டு செல்லப்பட்டன. பின்னர் அவ்வண்டில்களுக்கு தலா 5,000 ரூபா கப்பப் பணம் செலுத்தி உரிமையாளர்கள் அவற்றை விடுதலைப் புலிகளிடமிருந்து மீளப் பெற்றனர்.

14. இடம் : வாழைச்சேனை

திகதி : 13.07.2002

வாழைச்சேனையைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான 36 ஸ்ரீ 0228 இலக்கமுடைய உழவு இயந்திரம் விடுதலைப் புலிகச் சந்தேக நபர்களால் அபகரிக்கப்பட்டது.

15. இடம் : கல்முனை

திகதி : 10.11..2002

கல்முனை 03யைச் சேர்ந்த எம்.எஸ்.எம். தாஜுதீன் என்பவருக்குச் சொந்தமான முச்சக்கர வண்டி தமிழ் ஆயுதபாணிகளால் கடத்திச் செல்லப்பட்டது.

16. இடம் : வாழைச்சேனை

திகதி : 27.06.2003

பைசல் என்ற நபருக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிள் ஜெயந்தியாய பகுதியில் வைத்து ஆயுதபாணிகளால் கடத்தப்பட்டது.

17. இடம் : பாண்டியிருப்பு

திகதி : 04.07.2003

ஏறாவூரைச் சேர்ந்த முஸ்லிம் நபர் ஒருவருக்குச் சொந்தமான மோட்டர் சைக்கிள் பாண்டியிருப்பில் வைத்து ஆயுத பாணிகளால் கடத்தப்பட்டது.

18. இடம் : ஓட்டமாவடி

திகதி : 04.08.2003

மீராவோடை செம்மண்ணோடையைச் சேர்ந்த முகம்மது பாறூக் எள்பவருக்குச் சொந்தமான 37-7669 இலக்க உழவு இயந்திரம் அதிகாலையில் அவரது வீட்டுக்கு வந்த விடுதலைப் புலி இயக்க உறுப்பினர்களால் பலாத்காரமாக எடுத்துச் செல்லப்பட்டது.

19. இடம் : வாழைச்சேனை

திகதி : 10.08.2003

காணிக்கோப்பை எனும் பகுதியில் மண்ணேற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 11 முஸ்லிம்களை விடுதலைப் புலி உறுப்பினர்கள் கைதுசெய்து, 2 உழவு இயந்திரங்களை தமது அலுவலகத்திற்கு எடுத்துச் சென்றனர். (25-6093, 37ஸ்ரீ7669)

20. இடம் : ஏறாவூர்

திகதி : 13.08.2003

மருதமுனையில் இருந்து 290 அரிசி மூடைகளுடன் மாவனெல்ல நகருக்கு சென்று கொண்டிருந்த கிண்ணியா மஃறூப் எம்.பிக்குச் சொந்தமான லொறி ஏறாவூருக்கும் வாகனேரிக்கும் இடைப்பட்ட சிறிய காட்டுப்பகுதியான கிண்ணையடியில் வைத்து ஆயுத முனையில் கடத்திச் செல்லப்பட்டது.

21. இடம் : அக்கரைப்பற்று

திகதி : 22.08.2003

மாஞ்சோலை முஸ்லிம் கிராமிய வைத்திய சாலைக்குரிய அம்பியூலன்ஸ் வண்டி நோயாளிகளை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்த்து விட்டு திரும்பிக் கொண்டிருக்கையில் தமிழ் பிரதேசமான சித்தாண்டியில் வைத்து சரமாரியான கல்வீச்சுக்கு இலக்கானது.

22. இடம் : தோப்பூர்

திகதி : 17.07.2002

தோப்பூர் முனைக்காடு என்ற கிராமத்தில் வதியும் முஸ்லிம்களுக்குச் சொந்தமான ஒன்பது மாட்டு வண்டில்கள் விடுதலைப் புலிகளிளால் அபகரிக்கப் பட்டுள்ளது.

23. இடம் : வாழைச்சேனை

திகதி : 14.10.2002

ஜெயந்தியாய கிராமத்தில் உள்ள குளக்கட்டு பகுதிக்கு விறகு சேகரிக்கச் சென்ற மூன்று முஸ்லிம்களுக்குச் சொந்தமான வண்டில்கள் ஆயுதம் தாங்கிய நபர்களால் வழிமறிக்கப்பட்டு பலாத்காரமாக அபகரிக்கப்பட்டது.

24. இடம் : மூதூர்

திகதி : 10.07.2003

சித்துமுந்தான் எனும் பகுதியில் வைத்து முஸ்தபா (27) நசார் மும்தாஸ் (24) முஸ்தபா பரீஸ் (26) தௌபீக் நசார் (24) ஆகியோருக்குச் சொந்தமான நான்கு மாட்டு வண்டில்கள் புலிகள் இயக்க உறுப்பினர்களால் பலவந்தமாக அபகறித்துச் செல்லப்பட்டன.

## 2.2. கால் நடை அபகரிப்பு / கடத்தல்

01. இடம் : கிண்ணியா

திகதி : - - -.03.2002

கிண்ணியா முஸ்லிம்களுக்குச் சொந்தமான 50க்கும் மேற்பட்ட மாடுகள் ஆயுதபாணிகளால் எடுத்துச் செல்லப்பட்டன.

02. இடம் : வாழைச்சேனை

திகதி : 19.08.2003

அலி உதுமான் நயீம் என்பவருக்குச் சொந்தமான 36 கால் நடைகள் ஆயுதபாணிகளால் அபகரித்துச் செல்லப்பட்டது.

03. இடம் : கிண்ணியா

திகதி : 26.06.2003

52 கால் நடைகளும், அப்துல் லதீப் என்ற நபரும் விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டு விடுவிப்பதற்காக விடுதலைப் புலிகள் கப்பம் கோரியுள்ளனர்.

04. இடம் : மூதூர்

திகதி : 02.07.2003

ஜாயா நகரைச் சேர்ந்த செய்யது முகம்மது அபூபக்கர் (39) என்பவருக்குச் சொந்தமான 6 பசுக்களை ஜபல் நகர் எனும் இடத்தில் வைத்து புலிகளின் மறவர் படை உறுப்பினர்கள் சம்பூர் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

## 2.3. உடமைகள் அபகரிப்பு

01. இடம் : ஏறாவூர்

திகதி : 10.07.2002

ஏறாவூர் எம்.எம்.சேகு அப்துல் காதர் என்பவருக்குச் சொந்தமான சதாம் ஹூசைன் கிராமத்திலுள்ள தோட்டத்திலிருந்து 18 யூகலிப்ரஸ் மரங்களை விடுதலைப் புலிகள் வெட்டி எடுத்துச் சென்றுள்ளனர்.

02. இடம் : வந்தாறுமூளை

திகதி : 02.08.2002

கல்முனையைச் சேர்ந்த முஸ்லிம் வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான 42-7275 இலக்க வாகனம் 250 பக்கட் சீமெந்துகளை ஏற்றிக் கொண்டு திருகோணமலையில் இருந்து கல்னை நோக்கி சென்று கொண்டிருந்த போது வந்தாறு மூலை எனும் இடத்தில் வைத்து புலிகளால் வழிமறிக்கப்பட்டு அதிலிருந்த 250 பக்கெட் சீமெந்துகளும் அபகலிக்கப்பட்டன. அத்துடன் லொறியின் சாரதியும், உதவியாளரும் இரவு 8.30 மணியில் இருந்து அதிகாலை 3.30 மணிவரை புலிகளின் காரியாலயத்தில் தடுத்துவைக்கப்பட்டனர்.

03. இடம் : மூதூர்

திகதி : 15.04.2003

மூதூரைச் சேர்ந்த எம்.ஏ.ஸதாத் என்பவருக்குச் சொந்தமான மீன்பிடி வலை விடுதலைப் புலி உறுப்பினர்களால் பலாத்காரமாக அபகரித்துச் செல்லப்பட்டது.

04. இடம் : மூதூர்

திகதி : 16.05.2003

தாஹா நகரைச் சேர்ந்த அப்துல் மஜீது பஸீரின மீன்பிடி வலைகள், மீன்பிடி உபகரணங்கள் உள்ளடங்கிய தோனி கிருபா, சகாயன், ரூபன், எமன்ஜூஸ் ஆகியோரால் நாவலடி பிரதேசத்திற்கு அபகரித்துச் செல்லப்பட்டது.

05. இடம் : மூதூர்

திகதி : 25.05.2003

நெய்தல் நகரைச் சேர்ந்த நாகூரான் யூனுஸ்(35) சூடாக்குடா என்னும் இடத்தில் மீன்பிடிப்பதற்காக ஆற்றில் வீசியிருந்த வலைத்தொகுதி விடுதலைப் புலி உறுப்பினர்களால் வெட்டி எடுத்துச் செல்லப்பட்டது.

06. இடம் : மூதூர்

திகதி : 27.05.2003

ஹபீப் நகரைச் சேர்ந்த மீனவர்களான அப்துல் கபீர் பஸ்லின்(29) அந்தோணி முகம்மது றியாஸ்(25) என்பவர்களுக்குச் சொந்தமான மீன் பிடி வலைகள் விடுதலைப் புலிகளின் உபபடை என நம்பப்படும் மறவர் படையைச் சேர்ந்த உறுப்பினர்களால் பலாத்காரமாக அபரித்துச் செல்லப்பட்டது.

07. இடம் : மூதூர்

திகதி : 29.05.2003

தக்வா நகரைச் சேர்ந்த அப்துல் ஹமீது முபாரக்(35) என்ற ஏழை மீனவரின் மீன்பிடி வலை நாவலடி பகுதியில் வைத்து புலிகளின் மறவர் படையைச் சேர்ந்த ரூபன் என்பவரால் துப்பாக்கி முனையில் பயமுறுத்தி பறித்தெடுத்துச் செல்லப்பட்டது.

08. இடம் : காத்தான்குடி

திகதி : 08.07.2003

காத்தான்குடி கடற்பரப்பில் வைத்து முஸ்லிம்களுக்குச் சொந்தமான 4 படகுகளும் மின்பிடி உபகரணங்களும் தமிழ் ஆயுதபாணிகளால் அபகரித்துச்செல்லப்பட்டது.

09. இடம் : காத்தான்குடி

திகதி : 07.08.2003

காத்தான்குடி கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த முஸ்லிம் மீனவர்களுக்குச் சொந்தமான 7 மீன்படிப்படகுகள், மற்றும் வலைகள், இயந்திரங்கள், உபகரணங்கள் என்பவை ஆயுதம் தாங்கிய நபர்களால் அபகரித்துச் செல்லப்பட்டன.

10. இடம் : ஓட்டமாவடி

திகதி : 09.08.2003

புனானைக் குளத்திற்கு மீன்பிடிக்கச் சென்ற முஸ்லிம் மீனவர்களுக்குச் சொந்தமான 5 தோணிகளும் மீன்பிடிவலைகளும் ஆயுத பாணிகளால் பறிமுதல் செய்யப்பட்டு அவற்றை விடுவிப்பதற்கு தோணி ஒன்றுக்கு தலா 10 ஆயிரம் ரூபா கப்பமாக கோரப்பட்டது.

11. இடம் : வாழைச்சேனை

திகதி : 10.08.2003

மீன்பிடியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த முஸ்லிம்களுக்குச் சொந்தமான 5 வள்ளங்கள் விடுதலை புலி உறுப்பினர்களால் அபகரித்துச் செல்லப்பட்டது.

12. இடம் : ஓட்டமாவடி

திகதி : 14.08.2003

முஹம்மது காசிம் ஹயாத் முஹம்மது என்பவருக்குச் சொந்தமான இறால் பண்ணையில் இருந்த ஐந்து லட்சம் பெறுமதியான ஜெனரேட்டர். 50 ஆயிரம் பெறுமதியான வயர்களையும் விடுதலைப் புலிகள் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

13. இடம் : அக்கரைப்பற்று

திகதி : 15.08.2003

அக்கரைப்பற்று கடற்பரப்பில் மீன்பிடித்தலில் ஈடுபடும் வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து வாழும் முஸ்லிம்களுக்குச் சொந்தமான 2 படகுகள், 6 எஞ்சின்கள், 5 கலன் எண்ணெய், 35 லீற்றர் பெற்றோல், 5 பப்லர், பதப்படுத்தப்பட்ட 1000 கடலட்டைகள் சுழியொடும் உடைகள், பாதணிகள் மற்றும் பல மீன்பிடி உபகரணங்கள் என்பன ஆயுத பாணிகளால் அபகரித்துச் செல்லப்பட்டது.

14. இடம் : கிண்ணியா

திகதி : 23.09.2003.

மாதிரிக்கிராமத்தைச் சேர்ந்த மஜீத் கானின் கடை தமிழ் ஆயுத பாணிகளால் கொள்ளையடிக்கப்பட்டது.

15. இடம் : ஓட்டமாவடி

திகதி : 26.10.2003

ஓட்டமாவடி பிரதான வீதியில் அமைந்துள்ள முஸ்லிம் நபருக்குச் சொந்தமான புடைவைக் கடை ஒன்றில் நுழைந்த ஆயுதபாணிகள் 30,000 ரூபா பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்துச் சென்றனர்.

## 2.4. உடமைகள் மீதான தாக்குதல் / தீவைப்பு

01. இடம் : வாழைச்சேனை

திகதி : 23.09.2002

வாழைச்சேனை ஆலிம் வீதியைச் சேர்ந்த பீ.எம்.அப்துல் லத்தீப் என்பவருக்குச் சொந்தமான கடை இரவு வேலையில் எரிக்கப்பட்டதுடன் அங்கிருந்த 60 சீமெந்து பக்கட்டுகளும் மற்றும் கம்பிகள் போன்ற கட்டிடப் பொருட்கள் கொள்ளையடித்துச் செல்லப்பட்டுள்ளது.

02. இடம் : வாழைச்சேனை

திகதி : 18.10.2002

வாழைச்சேனை பிரதான வீதியில் உள்ள சிறாஜுதீன் என்பவருக்குச் சொந்தமான சில்லறைக் கடைக்கு இனந்தெரியாத நபர்களினால் தீ வைத்து எரிக்கப்பட்டது.

03. இடம் : வாழைச்சேனை

திகதி : 19.10.2002

வாழைச்சேனை பிரதான வீதியில் அமைந்துள்ள அப்துல் கபூர் மீராமுகைதீன் என்பவருக்குச் சொந்தமான சில்லறைக்கடை இனம்தொரியாத நபர்களால் தீ வைத்து எரிக்கப்பட்டது.

04. இடம் : வாழைச்சேனை

திகதி : 23.10.2002

வாழைச்சேனை பிரதான வீதியில் உள்ள எம்.ஐ. பாஹிர் என்பவருக்குச் சொந்தமான வலைக்கடை இனந்தெரியாத நபர்களினால் தீவைத்து எரிக்கப்பட்ட்து.

05. இடம் : வாழைச்சேனை

திகதி : 25.10.2002

வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள அச்சு முஹம்மது என்பவருக்குச் சொந்தமான டுபாய் கடை இனந்தெரியாத நபர்களினால் தீ வைத்து எரிக்கப்பட்டது.

06. இடம் : காத்தான்குடி

திகதி : 20.12.2002

1990ல் விரட்டியடிக்கப்பட்ட முஸ்லீம்கள் சமாதான சூழ்நிலைகளின் போது மீள்குடியேறுவதற்காக குடிசைகளை அமைத்தனர். இவ்வாறு அமைக்கப்பட்ட முஸ்லிம்களின் குடிசைகள் விடுதலைப் புலிகளாலும் அவர்களது ஆதரவாளர்களாலும் தீக்கிரையாக் கப்பட்டது.

07. இடம் : வாழைச்சேனை

திகதி : 23.01.2003

உமர் லெப்பை யாக்கூபுக்குச் சொந்தமான கடை தமிழ் ஆயுத பாணிகளால் தீவைத்து எரிக்கப்பட்டதுடன் இப்பிரதேசத்தில் மீண்டும் வியாபராத்தில் ஈடுபட வேண்டாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளனர்

08. இடம் : தோப்பூர்

திகதி : 06.04.2003

58ம் கட்டைப் பகுதியில் முஸ்லிம் நபர் ஒருவரின் கடையொன்று இனந்தெரியாத ஆயுதபாணிகளால் தீ வைத்து எரிக்கப்பட்டது.

09. இடம் : மூதூர்

திகதி : 16.04.2003

பாலைநகரில் உள்ள எம்.கே.எம். மன்சூர் என்பவருக்குச் செந்தமான மர ஆலை தீவைத்து எரிக்கப்பட்டது.

10. இடம் : மூதூர்

திகதி : 11.06.2003

ஆசாத் நகர் 10ம் கண்டம் எனுமிடத்திலுள்ள அப்துல் கபூர் (46) என்பவருக்குச் சொந்தமான வீடும் தோட்டமும் முற்றாக எரிக்கப்பட்டது.

11. இடம் : பொத்துவில்

திகதி : 25.06.2003

முஸ்லிம்களுக்குச் சொந்தமான 15 மாட்டு வண்டில்கள் தமிழ் ஆயுத பாணிகளால் தீவைத்து எரிக்கப்பட்டதுடன் அப்பகுதியில் இருந்த விவசாயிகள் பலர் அவர்களின் தாக்குதலுக்கு இலக்காகினர்.

12. இடம் : திருகோணமலை

திகதி : 01.08..2003

திருகோணமைல என்.சி. வீதியிலுள்ள முஸ்லிம் நபரெருவருக்குச் சொந்தமான நவாமிலாஸ் ஜவுளிக்கடை கைக்குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானது.

## உ.5.வரி, கப்பம் அறவீடு

01. இடம் : ஏறாவூர்

திகதி : 15.02.2002

இலுப்பட்டிச்சேனை, தொன்தியான் பள்ளம், பதுளை வீதியிலுள்ள தனது காணியைப் பார்வையிடச் சென்ற அதன் உரிமையாளர் அக்காணியை விடுதலைப் புலிகள் தமிழ் பொதுமக்களுக்கு மாதாந்த வாடகை அடிப்படையில் பயன்படுத்துவதற்கு வழங்கியுள்ளதனையும் அதனைப் பயன்படுத்தும் தமிழ் பொது மக்கள் தன்னிடம் தெரிவித்ததாக முறைப்பாடு செய்துள்ளார்.

02. இடம் : மத்திய முகாம் (Central Camp)

திகதி : 20.06.2002

விடுதலைப் புலிகள் அமைப்பினைச் சேர்ந்த உறுப்பினர்கள் மத்திய முகாமிலுள்ள பல முஸ்லிம் வர்த்தகர்களிடம், பொதுமக்களிடமும் 500.00, 1000.00 ரூபா வீதம் பலாத்கார பண வசூலிப்பில் ஈடுபட்டதாக பணம் செலுத்திய பலர் முறைப்பாடு செய்துள்ளனர்.

03. இடம் : அக்கரைப்பற்று

திகதி : 09.07.2002

அக்கரைப்பற்றிலுள்ள விவசாயிகள், விவசாய உத்தியோகத்தர்களை விடுதலைப் புலிகளின் இராணுவப் பொறுப்பாளர் றீகன் சாகாமம் வீதியிலுள்ள ஊஷஊஷகூழாவடி வயல்// எனும் இடத்தில் ஒன்றுகூட்டி நெல் அறுவடையில் ஈடுபடும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஏக்கருக்கும் 700/= ரூபா வீதம் வரி செலுத்த வேண்டும் என வேண்டினார்.

04. இடம் : அக்கரைப்பற்று

திகதி : 09.07.2002

விடுதலைப் புலிகளின் பிராந்தியப் பொறுப்பாளர் றீகனால் கூளாவாடி வயல் பிரதேசத்தில் வைத்து விவசாய உத்தியோகத்தர்கள், தமது அமைப்பிற்கு ஒரு ஏக்கர் அறுவடைக்கு 500 ரூபா வீதம் வரி அறவீடு செய்து தருமாறு வேண்டப்பட்டனர்.

05. இடம் : அம்பாறை மாவட்டம்

திகதி : 10.07.2002

அம்பாரை மாவட்டத்திலுள்ள குளிர்பான விநியோகஸ்தர்களிடம் (Pepsi, CocaCola, Elephant house rings) விடுதலைப் புலிகள் ஒரு குளிர்பான போத்தலுக்கு 50 சதம் வீதம் வரி செலுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்

06. இடம் : கல்முனை

திகதி : 07.08.2002

கல்முனையில் செங்கல், மண், கொங்கிறீட் கல் போன்றவற்றை விற்பனை செய்யும் முஸ்லிம் லொறி உரிமையாளர்களிடம் புலிகள் ஒவ்வொரு சுமைக்கும் 200/= வீதம் கப்பம் செலுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். மறுப்பவர்களுக்கு 10,000/= தண்டப்பணம் விதிக்கப்பட்டு வாகனம் பறிமுதல் செய்யப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

07. இடம் : வாழைச்சேனை

திகதி : 06.09.2002

வாழைச்சேனை கேணிமடு எனும் இடத்தில் அரசுக்குச் சொந்தமான காணியில் மண் அகழும் பணியில் ஈடுபடும் முஸ்லிம்களை விடுதலைப் புலி உறுப்பினர்கள் கப்பம் செலுத்துமாறு கோரியுள்ளனர். ஒரு பெட்டி மண்ணுக்கு 150ரூபாவும், ஒரு லோட் செங்கல்லுக்கு 500ரூபாவும் செலுத்தும்படி கோரியுள்ளனர்.

08. இடம் : காரைதீவு

திகதி : 13.09.2002

காரைதீவினூடாக அயல் பிரதேசங்களிலிருந்து போக்குவரத்து செய்த கல், மண் முதலிய கட்டிடப் பொருட்களை ஏற்றிவரும் லொறிகள்மீது விடுதலைப் புலிகள் எனக் கூறிக் கொண்ட சில நபர்கள் கப்பம் கோரியுள்ளனர். இதன்போது ஒரு ரிப்பர் லொறிக்கு 200ரூபா வீதம் கப்பம் கோரப்பட்டு கொடுப்பனவு பற்றுச் சீட்டு என்று ரசீதும் கொடுக்கப்பட்டுள்ளது.

09. இடம் : கிண்ணியா

திகதி : .....05.2003

கிண்ணியாவிலுள்ள உழவு இயந்திர உரிமையாளர்கள் வருடாந்தம் 15,000 ரூபா வீதமும், கால் நடை உரிமையாளர்கள் 500 ரூபா வீதமும், விறகு சேகரிப்பில் ஈடுபடும் மாட்டு வண்டில் உரிமையாளர்கள் 700 ரூபா வீதம் வரி செலுத்தப்பட வேண்டும் என விடுதலைப் புலிகளால் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

10. இடம் : திருகோணமலை

திகதி : 18-19.09.2003.

திருகோணமலை சூரக்கல் பகுதியைச் சேர்ந்த கே.எம். ரகீப், நடுவூற்றைச் சேர்ந்த ஏ.ஆர்.யாசீன், மாதிரிக் கிராமத்தைச் சேர்ந்த அல்லாபிச்சை, கச்சகொடித் தீவைச் சேர்ந்த ஏ.எஸ்.நஸார் ஆகியோர் விடுதலைப் புலி உறுப்பினர்களால்

கடத்தப்பட்டு சுங்கான் குழி தமிழ் வித்தியாலயத்தில் ஓர் இரவு தடுத்து வைக்கப்பட்டு அவர்களின் விடுதலைக்காக விடுதலைப் புலிகளால் 60,000ரூபா கப்பம் கோரப் பட்டது.

11. இடம் : கல்குடா

திகதி : .....10.2003

பெரும்போக விவசாயத்தில் விடுதலைப் புலிகள் கல்குடா முஸ்லிம்களிடம் மூடைக்கு 30 ரூபா வீதம் கப்பம் கோரியுள்ளர். இங்கு 25 ஏக்கர் காணிகள் விவசாயம் பயிரிடப்படுகின்றது. இதன் மூலம் விடுதலைப் புலிகளுக்கு கப்பம் மூலம் வருவாயாக 30,000,000 ரூபா கிடைக்கின்றது. மேலும் அங்கு உழவு வேலைகளில் ஈடுபடுகின்ற உழவு இயந்திரத்திற்கு போகத்திற்கு 5600 ரூபா கப்பமாக அறவிடப் படுகின்றது. ஆனால் விடுதலைப் புலி உறுப்பினர்களின் காணிகளை இலவசமாக உழுது கொடுக்க வேண்டும்.

12. இடம் : யாழ்ப்பாணம்

திகதி : 07.10.2003

மாத்தறையைச் சேர்ந்த காமில், சுராஜ் ஆகிய இருவரும் யாழ்ப்பாணத்திற்கு வியாபாரத்திற்காக சென்றிருந்போது அவர்களிடம் விடுதலைப் புலிகள் கப்பம் கோரி அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

## 2.6. ஏனையவைகள்

இடம் : சாய்ந்தமருது

திகதி : 26.09.2002

பாண்டிருப்பிலிருந்து காரைதீவை நோக்கிச் மோட்டார் சைக்கிளில் சென்ற இரு தமிழ் இளைஞர்கள் தங்களது மோட்டார் சைக்கிளுக்கு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளை நிரப்பிவிட்டு தாங்கள் புலிகள் உறுப்பினர்கள் எனக்கூறி பணம் செலுத்தாது சென்றனர்.

# 3. சமூக, சமய ரீதியானவை

3.1. கிராமங்கள் மீதான தாக்குதல்கள்

3.2. கிராமங்களை விட்டு வெளியேற்றுதல்

3.3. பகிஷ்கரிப்புக்கள்

3.4. அச்சுறுத்தல்கள்

## 3.1. கிராமங்கள் மீதான தாக்குதல்கள்

01. இடம் : மூதூர்
திகதி : 22.06.2002

ஜின்னாநகர்,ஆலிம்நகர்,இக்பால்நகர்,ஷாபிநகர் ஆகிய கிராமங்கள் மீது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து வந்த தமிழ் ஆயுத பாணிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

02. இடம் : வாழைச்சேனை
திகதி : 27.06.2002

வாழைச்சேனை நகர் பகுதி விடுதலைப் புலி உறுப்பினர்களாலும் தமிழ் ஆயுதபாணிகளாலும் தாக்கப்பட்டு அங்குள்ள கடைகளும் வீடுகளும் வாகனங்களும் கொள்ளையடிக்கப்பட்டும் தீவைக்கப்பட்டும் சேதமாக்கி அழிக்கப்பட்டன.

03. இடம் : மூதூர்
திகதி : 19.09.2002

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான சம்பூரிலிருந்து முஸ்லிம் வாழும் மூதூர் நெய்தல் நகர் பகுதியை நோக்கி தமிழ் ஆயுத பாணிகளால் சராமரியான துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

04. இடம் : தோப்பூர்
திகதி : 17.04.2003

பாலத் தோப்பூர் கிராமம் பாதுகாப்புப் படையினர் முன்னிலையில் தமிழ் ஆயுத பாணிகளால் தாக்கப்பட்டது. இதில் 30 வீடுகள் முற்றாக எரிக்கப்பட்டு பல வாகணங்கள் சேதப்படுத்தப் பட்டன.

05. இடம் : மூதூர்
திகதி : 17.04.2003

ஆலிம்சேனை, தக்வா நகர், தாஹா நகர், ஜின்னா நகர், மூதூர் வடக்கு ஆகிய ஐந்து கிராமங்கள் தமிழ் ஆயுதபாணிகளால் தாக்கப் பட்டு, சொத்துக்கள் சூரையாடப்பட்டு சேதப்படுத் தப்பட்டு எரிக்கப்பட்டன.

06. இடம் : மூதூர்
திகதி : 18.04.2003

பாலை நகர், கைரியா நகர், ஆசாத் நகர், பாரதி புரம், மூதூர் கிழக்கு, ஜின்னா நகர் ஆகிய கிராமங்கள் மீது தமிழ் ஆயுத பாணிகள் தாக்குதல் நடத்தி, உடமைகளை சூரையாடி, பின்னர் தீவைத்தனர். இதனால் 20,000 மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

07. இடம் : கிண்ணியா
திகதி : 23.09.2003.

பைஸல் நகர் அல் இர்பான் வித்தியாலயத் திற்குச் சொந்தமான காணியில் ஆலங்கேணித் தமிழர்கள் அத்துமீறிக் குடியேறியதைத் தொடர்ந்து தமிழ் மக்களினால் நடத்தப்பட்ட தாக்குதலினால் ஈச்சந்தீவிலுள்ள சுமார் 25 முஸ்லிம்களின் வீடுகள் சேதப்படுத்தப்பட்டது.

# 3.2. கிராமங்களை விட்டு வெளியேற்றுதல்

01. இடம் : ஏறாவூர், மட்டக்களப்பு
திகதி : 11.06..2002

செங்கல்லடி பதுளை வீதியிலுள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகளை 12 வருடமாக புலிகள் ஆக்கிரமித்து அவற்றை தமது நலன்களிற்காக பயன்படுத்திவரும் விடுதலைப் புலிகள் அப்பகுதிகளுக்கு முஸ்லிம்கள் செல்வதை தடைசெய்துள்ளனர். இந்நிலங்களில் தமிழர்கள் விவசாய நடவடிக்கைகள், செங்கல் உற்பத்தி போன்ற தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

02. இடம் : பாலைநகர்
திகதி : 14.07.2002

கணக்கர் சின்னத்தம்பி என்பவரின் தலைமையில் வந்த விடுதலைப் புலி உறுப்பினர்கள் இக்கிரா மத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் அனைவரையும் அக்கிராமத்தை விட்டு வெளியேறுமாறு வேண்டிய துடன் இல்லாவிடில் பாரதுரமான விளைவுகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படும் என எச்சரித்ததை யடுத்து பீதிக்குள்ளான முஸ்லிம்கள் இக்கிரா மத்தை விட்டு வெளியேறினர்.

03. இடம் : வாழைச்சேனை
திகதி : 29.07.2002

வாழைச்சேனையிலுள்ள நாவலடிச்சந்தி, ஹிஜ்ரா நகர் ஆகிய கிராமங்களினுள் பிரவேசித்த புலி இயக்க உறுப்பினர்கள் சிலர் அங்கு வாழும் மக்களை அவர்களின் வாழ்விடங்களை விட்டு வெளியேறுமாறு அச்சுறுத்தினர். இதன் காரணமாக சுமார் 60 முஸ்லிம் குடும்பங்கள் தமது வாழ்விடங்களில் இருந்து வெளியேறி அகதிகளாக பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

04. இடம் : மன்னார்
திகதி : 15.09.2002

எல்லாளன் படையணி என்ற பெயரில் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் மன்னாரில் வாழும் முஸ்லிம்களை 30.09.2002க்கு முன்னர் உடனடியாக மன்னாரைவிட்டும் வெளியேறுமாறு கோரப்பட்டுள்ளனர். அத்துடன் 30.09.2002ல் இருந்து முஸ்லிம் பாடசாலைகள் நடக்கக்கூடாது எனவும் அதனை மீறி முஸ்லிம் பாடசாலைகள் நடத்தப்பட்டால் மாடுகளை வெட்டுவதைப் போல் முஸ்லிம் மாணவர்கள் வெட்டப்படுவார்கள் என எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

05. இடம் : மட்டக்களப்பு
திகதி : 05.11.2002

முஸ்லிம் காலகாலமாக இ வாழ்ந்துவந் மட்டக்களப்பு மஞ்சத்தொடுவாய் காணிகள் விடுதலைப் புலிகளால் 05.11.2002 அன்று இரவோடு இரவாக தமிழ் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

06. இடம் : யாழ்ப்பாணம்
திகதி : 23.03.2003

1990 விரட்டப்பட்ட முஸ்லிம்கள் மீண்டும் தங்களுடைய இடங்களுக்கு மீள்குயேறச் சென்றபோது தமிழ் தரப்பினர் அவர்களின் காணிகளில் குடியிருந்து கொண்டு முஸ்லிம்களை குடியேற மறுத்ததுடன் கடுமையாக தாக்கியுமுள்ளனர். இதில் 7 பேர் படுகாயத்திற்குள்ளானார்கள்.

07. இடம் ஏறாவூர்
திகதி : 04.08.2003

செங்கலடி - பதுளை வீதியிலுள்ள உறுகாமம் குளத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த 19 முஸ்லிம் மீனவக் குடும்பங்கள் விடுதலைப் புலிகளின் வெளியேற்ற உத்தரவைத் தொடர்ந்து மீன் பிடிவலைகள், வள்ளங்கள், உபகரணங்கள் என்பவற்றை விட்டு விட்ட ஏறாவூருக்கு அகதிகளாக இடம் பெயர்ந்தனர்.

## 3.3. பகிஷ்கரிப்புக்கள்

01. இடம் : யாழ்ப்பாணம்

திகதி : 09.06.2002

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்தத்தை தொடர்ந்து இலக்கம் 23, ஆசாத் வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரியையுடைய வீட்டுடைமையாளர் தனது வீட்டை பார்வையிட சென்ற போது அவ்வீட்டில் அத்துமீறி வசித்துவரும் தமிழ் குடும்பத்தினால் வீட்டைப் பார்வையிடுவதிலிருந்து தடுக்கப்பட்டார்.

02. இடம் : காத்தான்குடி

திகதி : 15.06.2002

கர்பலா வீதியைச் சேர்ந்த முஸ்லிம் புடவை வியாபாரி ஒருவர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு வியாபாரத்திற்குச் செல்லும் வழியில் மகிழடிச்சந்தியடியில் வைத்து இடைமறித்த விடுதலைப் விடுதலைப்புலி உறுப்பினரால் ''முஸ்லிம் வியாபாரிகளுக்கு இப்பகுதியின் வியாபாரம் செய்ய அனுமதி இல்லை எனக்கூறி'' முஸ்லிம் வியாபாரி திருப்பி அனுப்பப்பட்டார்.

03. இடம் : வாழைச்சேனை

திகதி : 06.07.2002

பெரும்வெட்டையிலுள்ள வயல்நிலங்களில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகச் சென்ற முஸ்லிம் விவசாயிகளை விடுதலைப் புலிகளின் அப்பகுதிப் பொறுப்பாளராகிய குகன் அவர்களை ஓரிடத்தில் ஒன்றுகூட்டி அவமானப் படுத்தும் வகையில் கீழ்த்தரமான வார்த்தைகளில் பேசியுள்ளார். அக்கூட்டத்தில் கலந்துகொண்ட வட்ட விதானையாகக் கடமைபுரிபவரான எம்.முஸ்தபா லெப்பை என்பவர் ஆட்சேபித்த போது, அவர் புலிகளால் கடுமையாகத் தாக்கப்பட்டார். அதன் பின்னர் முஸ்லிம் விவசாயிகள் அப்பகுதிக்குச் செல்வதை விடுதலைப் புலிகள் தடுத்துள்ளனர்.

03. இடம் : வாழைச்சேனை

திகதி : 01.08.2002

முஸ்லிம் வர்த்தகர்களுடனான அனைத்து வியாபார தொடர்புகளை துண்டிக்கக் கோரும் துண்டுப் பிரசுரங்கள் தமிழர் விழிப்புப்படை எனும் பெயரில் தமிழ் பிரதேசங்களில் விநியோகிக்கப்பட்டது. அத்துடன் விடுதலைப்புலிகளின் அறிவுறுத்தலுக் கமைய வாகரை, வெருகல் போன்ற இடங்களிலிருந்து பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக தமிழ் மக்களை ஏற்றிவரும் அரச, தனியார் போக்குவரத்து வாகனங்கள் முஸ்லிம் பிரதேசங்களில் நிறுத்தப்படாது புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலே நிறுத்தப்படுகின்றன. இதனால். முஸ்லிம் வர்த்தகர்களுடன் வழமையான கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டிருந்த தமிழ் மக்களுக்கு முஸ்லிம்களிடம் வியாபார நடவடிக்கை களில் ஈடுபட முடியாத சூழல் தோன்றியுள்ளது.

## 3.4. அச்சுறுத்தல்கள்

01. இடம் : காத்தான்குடி
திகதி : 26.02.2002

காத்தான்குடி தெற்கிலுள்ள ஆரயம்பதி கிராமத்தில் சிறு வியாபாரிகள், கடலைத் தொழிலாளிகள் 26 பேர் விடுதலைப் புலிகளால் அழைக்கப்பட்டு கல்லடியிலுள்ள தமது அலுவலகத்தில் வரி செலுத்துதல் தொடர்பான ஆவணத்தில் கையெழுத்திடும்படி அச்சுறுத தியதாக அவ்வியாபாரிகள் முறைப்பாடு செய்துள்ளனர்.

02. இடம் : செங்கல்லடி
திகதி : 18.06.2002

செங்கல்லடிப் பகுதியில் வியாபார நடவடிக கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த முஸ்லிம் களுக்குச் சொந்தமான வாகனங்கள் விடுதலைப் புலிகளின் செங்கல்லடிப் பிரதேசப் பொறுப்பாள ரால் வின்சன்ட் என்பவரால் அவரது அலுவலகத் திற்குப் பலாத்காரமாக எடுத்துச் செல்லப்பட்டன. வாகனங்களுடன் சென்ற விற்பனை முகவர்களிடம் வியாபார உரிமையாளர்களின் விபரம் கோரப்பட வியாபா ரத்தில் 50 வீத இலாபத்தை விடுதலைப் புலிகளுக்கு செலுத்துமாறும் செலுத்தத்தவறின் அப்பகுதிகளில் முஸ்லிம்கள் வியாபாரத்தில் ஈடுபட முடியாது என விடுதலைப்புலிகளால் எச்சரிக்கப் பட்டதாக மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் வினியோகஸ்தர்கள் சங்கத்தின் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

03. இடம் : காத்தான்குடி
திகதி : 17.07.2002

எஸ்.எல். ஒழுங்கையைச் சேர்ந்த முஸ்லிம் புகையிலை வியாபாரி ஒருவர் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்கு வியாபாரத்தில் ஈடுபடுவதற்குச் சொன்றவேளை மண்முனைக்கு அடுத்த இறங்குதுறையில் வைத்து புலிகளின் நெல் வரி வசூலிப்பாளரினால் ''முஸ்லிம் வியாபாரிகள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரரதேசத்தினுள் வியாபாரம் செய்யவதற்கு தடைசெய்யப்பட்டுள்ளனர்'' எனக் கூறி திரும்பி அனுப்பப் பட்டார்.

04. இடம் : கல்முனை
திகதி : 12.08.2002

கல்முனை சாய்ந்தமருது பகுதியில் உள்ள முஸ்லிம் வைத்தியர்களின் வீடுகளுக்கும், மருந்தகங்களுக்கும் ஆயுதங்களுடன் சென்ற புலிகள் இயக்க உறுப்பினர்கள் தமக்கு ஒரு தொகை மருந்து வகைகளை தருமாறு அல்லது 200 பென் ரோச் பெற்றரிகள் வாங்கித் தருமாறு கேட்டுள்ளனர். விடுதலைப் புலி உறுப்பினர்களின் இக்கோரிக்கையை நிராகரித்த வைத்தியர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டனர்.

05. இடம் : கிண்ணியா
திகதி : 10.11.2002

கிண்ணியா பைசல் நகர் கிராமத்தில் கஞ்சாவுடன் தொடர்புடைய நபர்களை கைது செய்யும் முயற்சியில் சீனன்குடா பொலிசார் ஈடுபட்டபோது இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து தாக்குதல் நடத்தியவர்களை பிடித்துத் தருமாறு பைசல் நகர் கிராம முஸ்லிம்களை பொலிசார் துண்புறுத்தி, பயமுறுத்தினர்.

06. இடம் : மூதூர்
திகதி : 26.05.2003

தாஹா நகரைச் சேர்ந்த சித்திக் சலீம்(60) எனும் மீனவரை நாவலடி ரஞ்சன் பயமுறுத்தி பின் அவரது தலைக்கு மேலால் இரு தடவைக் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார்.

07. இடம் : மூதூர்
திகதி : 10.06.2003

ஜின்னா நகரைச் சேர்ந்த செல்வநாயகம், கோபால ஆகியோரின் வீடுகள் முஸ்லிம்களால் எரிக்கப்பட்டுள்ளதாக தமிழர்களால் குற்றச்சாட்டப்பட்டு ஜின்னா நகர் முஸ்லிம்ள் பயமுறுத்தப்பட்டனர்.

08. இடம் : ஏறாவூர்
திகதி : 09.08.2003

றுகம், உன்னிச்சைப் பகுதிகளில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த முஸ்லிம்கள் அப்பகுதியில் மீன்பிடியில் ஈடுபடாது அப்பிரதேசத்தை விட்டு வெளியேறுமாறு ஆயுதபாணிகளால் அச்சுறுத்தப்பட்டனர்.

# 4. கல்வி, நிருவாக ரீதியானவை

## 4.1. கல்வி ரீதியானவை

## 4.2. நிருவாகரீதியானவை

# 4.1. கல்வி ரீதியானவை

01. இடம் : மட்டக்களப்பு

திகதி : 22.05.2002

மட்டக்களப்பு ஆசிரியப் பயிற்சி கல்லூாயில் நடைபெற்ற கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு கல்வி வலய பொறுப்பாளர்களை அம்மாவடத்திலுள்ள சகல முஸ்லிம் பாடசாலை அதிபர்களும் தமது பாடசாலைகளில் பயில்கின்ற மாணவர்களின் விபரங்களை சமர்ப்பிக்கும் படியும், விடுதலைப் புலிகளால் முன்னெடுக்கப்படும் கல்வி நிர்வாக நடவடிக்கைகளிற்கு ஒத்துழைப்புக்கும் படியும் வேண்டப்பட்டனர்.

02. இடம் : வாழைச்சேனை

திகதி : 12.09.2002

வாழைச்சேனையில் தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையில் ஏற்பட்ட கலவரம் காரணமாக வந்தாரமூலையில் உள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் முஸ்லிம் மாணவர்கள் தங்களது கல்வியைத் தொடர்முடியாது உள்ளனர். இதன் காரணமாக முஸ்லிம் மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கு மாற்று வசதியைச் செய்து தருமாறு கோரியுள்ளனர்.

03. இடம் : மட்டக்களப்பு

திகதி : 14.11.2002

2002ம் ஆண்டிற்கான மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நடைபெற்றதாக பயிற்சி நெறியில் கலந்து கொண்ட 37 முஸ்லிம் மாணவிகள் தமது சமய முறைப்படி உடை அணிவதற்கு மேலதிகாரிகளினால் தடுக்கப்பட்டனர்.

# 4.2. நிருவாக ரீதியானவை

01. இடம் : காத்தான்குடி பிரதேச செயலகம்.

திகதி : 15.06.2002

விடுதலைப் புலிகளின் பிரதேச நிதிப்பொறுப்பாளரால் காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் அப்பிர தேசத்திலுள்ள அரச உத்தியோகத்தரின் விபரம், வர்த் தகர்களின் விபரம், கைத்தொழில் உரிமையாளர்களின் விபரம் மற்றும் அவர்களின் வருமானங்கள் பற்றிய விபரம் கோரப்பட்டதாக பிரதேச செலாயளர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

02. இடம் : கல்முனை

திகதி : 21.06.2002

தமிழ்-முஸ்லிம் பொதுமக்களுக்கிடையில் கடந்த கால நிதிப் பிரச்சினைகளில் விடுதலைப்புலிகள் அனாவ சியத் தலையீடு செய்வதாகவும் விசாரணைக்காக வேண்டி முஸ்லிம்களை விடுதலைப் புலிகள் தமது காரியாலயத்துக்கு வரும்படி அழைப்பதாகப் சவழக் கடை வீரத்திடல் பள்ளிவாயல் நம்பிக்கையாளர் சபை தெரிவித்துள்ளது.

03. இடம் : சம்மாந்துறை

திகதி : 11.07.2002

11.07.2002 என தேதியிடப்பட்ட கடிதம் ஒன்று சம்மாந்துறை, 4ம் குறிச்சியைச் சேர்ந்த முஸ்லிம் நபர் ஒருவருக்கு அரசியல்துறை, தமிழீழ விடுதலைப் புலிகள், அம்பாறை மாவட்டம், என விலாசமிடப் பட்டிருந்த விடுதலைப்புலிகளால் அனுப்பி வைக்கப் பட்ட கடிதத்தில் அந்நபருடன் சில முக்கிய விடயங்கள் சம்பந்தமாக கலந்துரையாடுவதற்காக 16.07.2002 அன்று நாவிதன்வெளி அலுவலகத்திற்கு சமுமளிக்குமாறு வேண்டப்பட்டார்.

04. இடம் : கல்முனை

திகதி : 12.07.2002

சவளைக் கடையைச் சேர்ந்த இரு முஸ்லிம்களுக்கிடை யிலான தனிப்பட்ட கொடுக்கல் வாங்கள் விவகாரத்தில் விடுதலைப் புலிகள் தலையீடு செய்து சம்பந்தப்பட்ட ஒரு நபருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

05. இடம் : மட்டக்களப்பு

திகதி : 26.07.2002

சமுர்த்தி நிவாரண முத்திரையினை 25% தினால் குறைக்குமாறு அரச சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருந்த போதிலும், விடுதலைப்புலிகளின் அறிவுறுத்தலுக் கிணைய மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 3 பிரதேசங்களில் மாத்திரம் 35% குறைப்புச் செய்யும்படி மட்டக்களப்பு

மாவட்ட கச்சேரியினால் சுற்றுநிருபம் அனுப்பப் பட்டுள்ளது.

05. இடம் : வாழைச்சேனை

திகதி : 03.09.2002

முஸ்லிம் மக்கள் தனித்து வாழும் வாழைச்சேனை ஏ.ஓ. வீதியில் உள்ள அரசுக்குச் சொந்தமான காணியில் விடுதலைப் புலிகள் காரியாலயம் ஒன்றை அமைக்க முயல்வதாக ஊர்வாசிகள் முறைப்பாடு செய்துள்ளனர்.

06. இடம் : சம்மாந்துறை

திகதி : 12.09.2002

சம்மாந்துறை 4, கிலாவடி வீதியைச் சேர்ந்த முஸ்லிம் நபர் ஒருவர் பள்ளவெளி வயலில் அமைந்துள்ள தமிழ் நபர்களுக்குச் (கற்பகம் சண்முகநாதன் - கல்முனை, வீரமணி குணரத்தினம் - இங்கிலாந்து, ரீ. மகேஸ்வரி - கொழும்பு) சொந்தமான காணிகள் சிலவற்றை 32 வருடகாலமாக குத்தகைக்கு எடுத்துச் செய்து வருகின்றார். ஆனால் 2002.09.08ம் திகதி கல்முனை விடுதலைப் புலிகளின் காரியாலயம் இவரை அழைத்து தமிழர்களின் காணிகளை முஸ்லிம்கள் செய்கை பண்ணமுடியாது என்றும் அவற்றைத் திருப்பி ஒப்படைக்குமாறும் இந்நபரைப் பணித்துள்ளது.

07. இடம் : ஏறாவூர்

திகதி : 08.10.2002

மக்காமடி வீதியில் வசிக்கும் முஸ்லிம் நபர் ஒருவருக்கும் வாழையிரவில் வசிக்கும் செல்வராஜா என்பவருக்கும் இடையில் ஏற்பட்ட கொடுக்கல் வாங்கல் பிண்க்கின் காரணமாக குறித்த முஸ்லிம் நபர் விடுதலைப் புலிகளால் 2.10.2003ம் திகதி காலை 8 மணிக்கு விசாரணைக்காக தங்களது காரியாலயத்திற்கு வருமாறு அழைக்கப்பட்டார்.

08. இடம் : வாழைச்சேனை

திகதி : 14.10.2002

வாழைச்சேனையைச் சேர்ந்த இரு முஸ்லிம்களுக் கிடையிலான எல்லைப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட ஒரு நபர் விடுதலைப் புலிகளால் அவர்களது அலுவலகத்திற்கு விசாரனைக்கு வருமாறு அழைக்கப் பட்டுள்ளார்.

09. இடம் : வாழைச்சேனை

திகதி : 01.11.2002

வாழைச்சேனை தமிழ் பகுதியில் தமிழர் நலன் காக்கும் அமைப்பு எனும் பெயரில் பின்வரும் துண்டுப்பிரசுரம் வினியோகிக்கப்பட்டது.

எச்சரிக்கை

வாழைச்சேனை முஸ்லிம் சந்தையில் பொருட்கள் கொள்வனவு செய்வது, அங்கு கூடி நிற்பது தடைசெய்யப்பட்டுள்ளது. இவ் எச்சரிக்கையை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது தமிழர் நலன் காக்கும் அமைப்பு

அத்துடன் 31.10.2002, 01.11.2002 ஆகிய தினங்களில் வாழைச்சேனை பகுதிக்கு வந்த தமிழ் மக்களை அங்கு வந்த ஒரு தமிழ் குழுவினர் பொருட்கள் வாங்க விடாது தடுத்ததுடன் முஸ்லிம் பகுதிக்கு வரக்கூடாது என எச்சரித்து திருப்பி அனுப்பினர்.

10. இடம் : மூதூர்

திகதி : 18.04.2003

மூதூர் நகருக்கான மின்சாரம் வழங்குதல் விடுதலைப் புலிகளால் துண்டிக்கப்பட்டது.

11. இடம் : மூதூர்

திகதி : 06.07.2003

மூதூர் பிரதேசத்திற்கு வழங்கப்படும் மின்சார விநியோகம் இரால்குழி புலிகளின் பிரதேச மறவர் படை மூலம் துண்டிக்கப்பட்டது. அத்துடன் இரால்குழி பிரதேசத்திற்குரிய மின்விநியோகம் மேற்கொள்ளப் படும் வரை மூதூர் பிரதேசத்திற்கான மின்விநியோகம் வழங்கப்படக் கூடாதென மின்சார சபை ஊழியர்கள் விடுதலைப் புலிகளால் எச்சரிக்கப்பட்டனர்.

12. இடம் : செங்கலடி

திகதி : - - -.09.2003

நீண்டகாலமாக செங்கலடிப் பிரதேசத்தில் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த 50 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் வர்த்தகர்கள் அப்பகுதியில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு விடுதலைப் புலிகள் தடை விதித்தனர்

13. இடம் : காத்தான்குடி

திகதி : 03.09.2003

படுவான்கரையில் பிரதேசத்தில் வியாபாரத்தில் ஈடுபட்ட முஸ்லிம் வியாபாரிகள் விடுதலைப் புலி உறுப்பினர்களால் ஜிஹாத், பொலிஸ், இராணுவ தொடர்புகள் பற்றி விசாரிக்கப்பட்டதுடன் தொடர்ந்தும் படுவான்கரைப் பகுதியில் முஸ்லிம்கள் வியாபாரத்தில் ஈடுபடுவதானால் அவர்களின் புகைப்படமும், தேசிய அடையாள அட்டைப்பிரதியும் ஒப்படைக்கப்பட்டு விடுதலைப் புலிகளின் அனுமதியைப் பெற வேண்டும் என வேண்டப்பட்டனர்

14. இடம் : காத்தான்குடி

திகதி : 04.10.2003.

100 வீதம் முஸ்லிம்கள் வாழும் காத்தான்குடி பிரதேசத்திக்கான 2500 தொலைபேசிகளின் இணைப்பு விடுதலைப் புலிகளால் துண்டிக்கப்பட்டது.